விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி6 திங்கட்கிழமை (20.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 91

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## ஐ.தே.கவுடன் இணைந்து

# தேசிய அரசாங்கத்தை அமைக்க

# ஜனாதிபதி மகிந்த தீர்மானம்!

## அமைச்சர்களும் ஆதரவாம்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந் நடவடிக்கை சாத்தியப்படாது விட்டால், உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தவும் தீர்மானித்துள்ளதாகவும் கூறப் படுகின்றது. நோர்வேயின் அனுசரணைப் பணி தொடருமென ஜனாதிபதி அறி வித்துள்ள நிலையில் நோர்வேயை வெளியேற்றுவதற்கு ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் போராட்டங்களை நடாத்தத் தீர்மானித்துள்ளதையடுத்து ஜனாதி பதி இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு

### ஜெனீவாப் பேச்சுக்குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைத் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுத லைப்புலிகளின் சமாதானச் செய லகத்தில் நேற்றுக் காலை 10 மணி யளவில் ஆரம்பமான இச் சந்திப்பு சுமார் 2 மணி நேரம் இடம் பெற் றது.

ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சு வார்த்தை தொடர்பாகவே இச் சந் திப்பில் முக்கியமாக கலந்துரை யாடப்பட்டதாக யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம் பரநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக சில முடிபுகள் இக் கலந்துரையாடலில் எடுக்கப் பட்டது. தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதியிடமும் தேர்தல் ஆணை யாளரிடமும் தமிழ்த் தேசியக் கூட் டமைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கி மரணம்

### திருகோணமலை கடலில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை மாநகர சபை அருகே யுள்ளே கடலில் குளிக்கச் சென்ற மூன்று தமிழ் மாணவர்கள் உட்பட நான்கு மாண வர்கள் நீரில் மூழ்கி மரணமாகினர். இச் சம் பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கடலில் குளித்துக் கொண்டிருந்த இவர் கள் ஆழமான பகுதிக்குச் சென்றதால் நீரில் மூழ்கியதாகவும் அவர்களை அங்கிருந்த வர்கள் காப்பாற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற சமயம் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவர்களும் சகோதரர்களு மான மனோஜ் கிஸான்(வயது–19), லனோஸ் ரொஸான் (வயது–16) மற்றும் சிங்கள மகா வித்தியாலயத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைப் படகு மீது இனந்தெரியாதோர் சூடு

### க.கா.குழுவில் முறைப்பாடு

(திருகோணமலை)

மூதூர் சம்பூர்ப் பகுதியில் கடற்படை யினரை நோக்கி மூன்று படகுகளில் வந்த சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இலங் கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்று படகுகளில் வந்த விடுதலைப்புலி களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக இராணுவத் தலைமையகம் குற்றஞ்சாட்டி யுள்ளது.

இது தொடர்பாக கடற்படைத் தலைமை யக அதிகாரியான கொமாண்டர் தஸநாயக்க தெரிவிக்கையில்; கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 10 மணியளவில் மூன்று படகுகளில் வந்த சிலர் சம்பூரிலிருக்கும் 'நோர்வேப் பொயின்ட்' (12 ஆம் பக்கம் பார்க்க)

# துணைவேந்தர் பதவியிலிருந்து ஒருபோதும் விலகப் போவதில்லை

### பேராசிரியர் கூல் வலம்புரிக்குத் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவியிலிருந்து தான் ஒருபோதும் விலகப் போவதில் லையென பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் வலம்புரிக் குத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோக னதாஸின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ள நிலை யில் இன்னமும் பதவி ஏற்காதது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர்,

கல்வித் தகைமையின் அடிப்படையிலேயே தான் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் எவ் வித அரசியல் செல்வாக்காலும் தனக்கு அப்பதவி வழங்கப்படவில்லையெனத் தெரிவித்தார்.

தன்னைத் தேசவிரோதி எனவும் தேசவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் மாணவர்களால் கூறப்படுவது தனக்குக் கவலையளிப்பதாகவும் பேரா சிரியர் கூல் குறிப்பிட்டார். இதேவேளை விடுதலைப்புலிக ளின் தலைமை பீடத்துடன் சந்தித் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தபால்மூல வாக்களிப்பு இன்று

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் வாக்குப் பதிவு இன்று தொடங்கு கின்றது. தபால் வாக்குப் பதிவுகள் இரு நாட் கள் நடைபெறுகின்றன. 330 உள்ளூராட்சி சபைகளுக்கு மார்ச் 30 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் 22 சபைகளின் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணங் களில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக் கப்படுமா இல்லையா என்பது குறித்து இன்று முடிபுகள் வெளியாகுமென எதிர்பார்க்கப் படுகின்றது. (ச–4)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.




எக்ஸ்போ எயார்



வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 19 அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி மஹிந்த ஆலோசனை

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத 19 அரசியல் கட்சியினருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவா நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

மேலும் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துவதே தமது ஒரே குறிக்கோள் என்று இச்சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் எனவும்,

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அக்கட்சிப் பிரதிநிதிகள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தன எனவும் கூறப்படுகின்றது.

ஜெனீவா பேச்சுவார்த்தை தொடர்பாக தாம் திருப்தியடைவதாகவும் அக்கட்சியினர் கூறியதுடன் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாது இருப்பதை உறுதி செய்ய வேண்டியது அனைவரது பொறுப்பும் கடமையும் என்றும் ஜனாதிபதி மஹிந்தவிடம் சுட்டிக்காட்டினர் என தெரிவிக்கப்படுகின்றது. (க)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

ஆணைக்கோட்டை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பொது மக்களின் வளர்ப்பு நாய்களுக்கு, (ஏ.ஆர்.வி.) தடுப்பு மருந்து ஏற் றப்படவுள்ளது.

அதன்படி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் 11 மணிவரை உயரப்புலம் அடைக்கல நாயகி சனசமூக நிலையத்திலும், மதியம் 11.30மணி முதல் 1.30மணிவரை சும்மாரிறும் சந்திப் பகுதியிலும், 2 மணி தொடக்கம் 3.30 மணிவரை உதய தாரகை சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படும்.

அவ்வாறே நாளை மறுநாள் புதன்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை ஆனைக்கோட்டை பிரதேசசபை சனசமூக நிலையத்திலும், மதியம் 11.30தொடக்கம் 1.30 மணிவரை மூத்த நாயினர் கோயிலடியிலும், 2.30மணி முதல் 3.30மணிவரை சென் பீற்றர்ஸ் சனசமூகநிலையத்திலுமாகவளர்ப்பு நாய்களுக்குதடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரையும் குறிப்பிட்ட திகதிகளில் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பு மருந்தை ஏற்றும்படி கேட்கப்பட்டுள்ளது. (க-7)

# ம.உ.ஆ.குழுவின் ஆணையாளர் வவுனியாவுக்கு விஜயம்

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் என். செல்வக்குமாரன்கடந்தவெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு பயணம் மேற்கொண்டார்.

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையத்தினர்செய்திருந்த முறைப்பாட்டையடுத்து அவர் இப்பயணத்தைமேற்கொண்டார். உள்நாட்டுப் போரின் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு நலன்புரி நிலையங்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லைஎன்று அம்மக்கள் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர்.

மாவட்ட அரச அதிபர், பொலிஸ் அதிகாரி, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர்ஸ்தானிகர் அலுவலக வவுனியா மாவட்ட பிரதிநிதி, பிரதேச செயலாளர், புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் உட்பட மற்றும் சில அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், முறைப் பாட்டாளர்கள் ஆகியோர் விசாரணையின் போது உடனிருந்தாக மாவட்டமனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளர் என்.சகுந்தலா தெரிவித்தார்.

முறைப்பாடுகள் அனைத்திற்கும் ஒரு இணக்கத்துடனான தீர்வு காணப்பட்டதாகவும் மீள்குடி யேற்றம் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது. (க)

# நேர்முகப் பரீட்சை

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்குசிற்றூழியர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை திருகோண மலை கப்பல் துறை சுதேச மருத்துவத்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்த நேர்முகத்தேர்வு–ஏற்கனவே நடை பெற்ற நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்காதோருக்கே நடைபெறவுள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலேயே இந்த ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது. (க-9)


## சிறு விளம்பரம்

**SPOKEN ENGLISH**

ஓய்வுபெற்ற ஒருவரினால் வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து எளியமுறையில் குறுகிய காலத்திற்குள் விஷேடமாக வெளிநாடு செல்பவர்களுக்கு ஆங்கிலம் பேசக் கற்றுக் கொடுக்கப்படும்.

K.சோமசுந்தரம், 6, மாவத்தை ஒழுங்கை, சுதுமலைதெற்கு மானிப்பாய். Tel. 021-4591001

(198)


# புலிகளுக்கு நிதி உதவி; விசாரணை நடத்த நோர்வேயின் நிதிக்கட்டுப்பாட்டு சபையால் முடியாது

நோர்வே நாட்டிலிருந்து விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கும் நிதி உதவிகள்பற்றி விசாரணை செய்வதற்கோ அவற்றைக் கட்டுப்படுத்தவோ நோர்வே நிதிக்கட்டுப்பாட்டு சபைக்கு அதிகாரம் இல்லை என அந்தச் சபை தெரிவித்துள்ளது என்ற செய்தியை கொழும்பு நாளேடு ஒன்று வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நோர்வே அரசாங்கம் மற்றும் நகர சபையினூடாக கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுக்கு 3 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்த நிதியுதவியளித்தல் சம்பந்தமாக நோர்வேயிலிருக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு எழுப்பிய கேள்விக்கு நிதிக்கட்டுப்பாட்டுச் சபை இத்தகைய பதில் தெரிவித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. (க)

# ஐரோப்பிய நாடுகளில் பலருக்கு வேலைவாய்ப்பு

எதிர்காலத்தில் வீட்டுப்பணியாளர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாக தொழில் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட சென்விரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் தொழிலமைச்சர்களுடன் கொள்கையளவில் இணக்கம்காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியத்தின் பிறஸ்ஸஸில் நகரில் அண்மையில் இடம் பெற்ற சர்வதேச மாநாட்டில் அமைச்சர் கலந்துகொண்டபோது இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் நேற்று முன்தினம் நாடு திரும்பிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். பிறஸ்ஸஸில் நகரில் நடைபெற்ற மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்ற தொழில் அமைச்சர்களும் உலக வங்கிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். (க-9)

# இராசி பலன்

**20.03.2006**

**(பங்குனி 6, திங்கட் கிழமை)**

**பஞ்சமி முற்பகல் 10.36மணிவரை**

**விசாகம் முற்பகல் 6.32மணிவரை**

**இராகுகாலம் 7.48-9.18மணிவரை**

**சுபநேரம் 12.18-1.48 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், ஆரோக்கியக்குறைவு, போசனசுகம். |
| இடபம் | நல்லவரவேற்பு, நண்பர்கள் சந்திப்பு, தொழில் நன்மை, பிரயாணம். |
| மிதுனம் | பணவருவாய், சுகவாழ்பு, திடீர்பயணம், பகைவர் நேசம். |
| கடகம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய இடையூறு, பித்தரோகம். |
| சிங்கம் | பயந்த சுபாவம், அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், வாகனசுகம். |
| கன்னி | கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, அந்நியர் சந்திப்பு. |
| துலாம் | கௌரவக்குறைவு, பொருள்விரயம், கற்பனைமிகுதி, வேலைச்சுமை. |
| விருச்சிகம் | நண்பகர் உதவி, சயனசுகம், தெளிந்த சிந்தை, பிரயாணம். |
| தனுசு | பிதாசிந்தை, எதிர்பாராத நன்மை, சுப செலவு, முயற்சி தாமதம். |
| மகரம் | மனமகிழ்ச்சி, சகோதரர் உதவி, கீர்த்தி, முயற்சி கைகூடும். |
| கும்பம் | சுபநிகழவு, பிரயாண நன்மை, பிறர்உதவி, காரியசித்தி. |
| மீனம் | சான்றோர் சந்திப்பு, சரீரப் பிரயாசை, அச்சமானநிலை, உஷ்ணவியாதி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# 15000 விவசாய அமைப்புக்களுக்கு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை

நாடுமுழுவதிலும் உள்ள சுமார் 15 ஆயிரம் விவசாய அமைப்புக்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்கும் விசேட திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப்படும் என கமத்தொழில் சேவைகள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டு அமைச்சர் எஸ். என்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உழவியந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் உட்பட பல்வேறு விவசாய உபகரணங்கள் வழங்கப்படும். இந்த நடவடிக்கைக்கு சீன அரசாங்கம் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது. இது தொடர்பாக சீன அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு விவசாய அமைச்சர் சீனா செல்லவுள்ளார். க-9)

# இசற்கோர் வெட்டுப்புள்ளி எப்போது வெளியாகும்?

பல்கலைக்கழக அனுமதிக்கான இசற் கோர் வெட்டுப்புள்ளிகள் எப்போது வெளியாகும் என்பதை தீர்க்கமாக கூறமுடியாது என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருட உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் வெளியான பெறுபேறுகளுக்கமைய மாணவர்கள்தமக்குரிய பாடத்திட்டத்தை தெரிவுசெய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டியதே இதற்கான காரணமென்று ஆணைக் குழுவின் பல்கலைக்கழக அனுமதிக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாடத்திட்டங்களை மாற்றும் பொருட்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களிடமிருந்து பெருமளவிலான விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும், அவற்றை பரீசிலித்த பின்னர் மாணவர்களை குறிப்பிட்ட பாடத்திட்டங்களில் அனுமதிப்பது எவ்வாறு என்பது குறித்து தீர்மாணிக்கப்படு மென்று அவர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# க.பொ.த.சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் 25ஆம் திகதி வெளியாகும்

(கொழும்பு)

கடந்த டிசம்பர்மாதம்நடைபெற்ற க.பொ.தசாதாரண தரப்பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் வெளியிட முடியுமென்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுகின்றன. இதே வேளை உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஒழுங்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மே மாதம் 22ஆம் திகதியிலிருந்து யூன் மாதம் 15ஆம் திகதி வரை இந்தப்பரீட்சை நடாத்தப்படவுள்ளது. (க-9)

# தபால் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உபதபால் அலுவலகங்கள் என்பவற்றில் தற்போது நிலவும் தபால் சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகதபால் மா அதிபர் கே. ஏ. எஸ்.சேனாதீர தெரிவித்திருக்கின்றார்.

18வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்றும் இது தொடர்பான விண்ணப்பப் படிவங்களைஎதிர்வரும்ஏப்ரல்மாதம்14ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜுன்மாதத்தில் நாட்டின் 25மாவட்டங்களையும் சேர்ந்த 125 நகரங்களில் நடைபெறவுள்ளன.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் சாதாரண தரப்பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம், உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் தபால் சேவை உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பிக்கமுடியும் ஜுன் மாதம் நடைபெறும்.

போட்டிப்பரீட்சையின் பெறு பேறுகளின் அடிப்படையில் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கே தபால் சேவை உத்தியோகத்தர் பதவிநியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (க-9)

# ரோகித போகல்லாகமவின் ஜெனீவாச் செலவு 8.5 இலட்சம்

(கொழும்பு)

ஜெனீவா சென்ற இலங்கை அரசாங்க பேச்சுக்குழுவில் இடம் பெற்றிருந்த அமைச்சர் ரோகித போகல்லாகம தனிப்பட்ட முறையில் 8.5 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளார்.

இந்தத் தொகையை அரசாங்கத்தரப்பு செலுத்தக் கூடாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்திரவிட்டுள்ளார்.

ரோகிதவும் அவரது குடும்பத்தாரும் மஹிந்தவின் உத்தரவை மீறி தனிப்பட்ட முறையில் ஜெனீவாவில் தங்கியுள்ளமை தொடர்பில் மஹிந்தவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து தனது செயலாளர் வீரதுங்கவிடம் அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணச் செலவினங்கள் தொடர்பான புதிய வழிகாட்டுதல்களைச் செய்யவும் உத்தரவிட்டார்.

மஹிந்தவின் கோபத்தையறிந்த ரோகித அவரை நேரில் சந்தித்து தான் எந்தச் சூழலில் குடும்பத்தலைவியை அழைத்துச்செல்ல நேரிட்டது என்பதை விளங்கியுள்ளார்.

இருந்த போதிலும் ரோகிதவின் குடும்பச் செலவினத்தொகையை அரசாங்கம் செலுத்தாது என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியதாக அலரிமாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-9)

# தமிழரின் தற்காப்புப் பயிற்சியால் அச்சமடைந்த அரசு நேரடியாகவே ஆயுதக் கொள்வனவில் இறங்கியது

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் தற்காப்புப் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதால் அச்சமடைந்திருக்கும் அரசாங்கம் தீவிர ஆயுதக் கொள்வனவில் நேரடியாக இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை இராணுவத்துக்கான ஆயுதக் கொள்வனவில் கடைபிடித்து வந்த நடைமுறைகள் மாற்றப்பட்டுள்ளன என்றும் இதற்கான புதிய கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

உள்நாட்டுத் தரகர்களை இனி நம்பாமல் இதர அரசாங்கங்களுடன் நேரடியாக இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளே ஆயுதக்கொள்வனவு பேச்சுக்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

இதற்கான அரச நிறுவனம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளதாகவும் இந்த நிறுவனத்தினூடே படையினருக்கும் பொலிஸாருக்குமான ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஆயுதக் கொள்வனவுக்காக கடந்த வாரம் பீஜ்ஜிங்கிற்கு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ பயணம் செய்துள்ளார்.

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கும் சீன வடக்கு தொழிற்சாலைகள் கூட்டுத்தாபனமான நொரின்கோ ஒப்பந்தத்தை இந்தப் பயணத்தின் போது அவர் புதுப்பித்துள்ளார்.

இதன்படி இலங்கை அரசாங்கம் அமைக்க உள்ள நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆயுத பண்டகசாலை ஒன்றை சீனா தொடர்ந்து இயக்கிக்கொண்டிருக்கும்.

இந்த பண்டகசாலையில் நொரின்கோவினால் வழங்கப்படுகிற ஆயுதங்கள், வெடிமருந்து, இராணுவ உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் உதிரிப்பொருட்கள் ஆகியவை சேமிக்கப்படும்.

இந்த தளபாடங்களை சீன நிறுவனமான நொரின்கோ தன் பொறுப்பில் இலங்கையில் வைத்திருக்கும். தேவைப்படும் போது இலங்கை அரசாங்கம் அவற்றுக்கான தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும்.

இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கான ஒரு வருடத்துக்கான ஆயுதங்களை நொரின்கோ ஏற்பாடுசெய்து கொடுக்கவுள்ளது.

சீன நிறுவனத்துடனான இந்த புதிய ஒப்பந்தமானது பல கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கை ஆயுதக் கொள்வனவு செய்வதைதடை செய்வதை அழுத்தமாக வலியுறுத்தி உள்ளது.

கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களில் பல பழையனவாக இருந்தமை தொடர்ந்து கண்டு பிடிக்கப்பட்டு வந்தது.

இந்திய இராணுவத்திற்கு கிழக்கு ஐரோப்பாவிலிருந்து கொள்வனவு செய்யப்படும் இராணுவ தளபாட உதிரி பாகங்களில் பல 20 ஆண்டுகள்பழமையானதாக இருந்ததாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் மூலமாக பாதுகாப்பு அமைச்சு ஆலோசகர் கோட்டபாய ராஜபக்ஷ அறிந்து கொண்டதாகவும் தெரிகிறது.

அதேபோல் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படுகிற இராணுவத் தள பாடங்களின் விலை குறித்தும் இலங்கை அரசாங்கம் கவலை கொண்டுள்ளது.

சீனாவுக்கு பயணம்மேற்கொண்டிருந்த கோட்டபாய ராஜபக்ஷஇதை நேரடியாகஅறிந்திருக்கிறார். மேற்கு ஐரோப்பியநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படும் அதே தள பாடத்தின் விலைக்கும் சீனாவின் விலைக்கும் பாரிய அளவிலான வேறுபாடு இருந்துள் ளது.

அத்துடன் ஐரோப்பிய நாட்டு உரிதிபாகங்கள் பல இலங்கையின் இராணுவதளபாடங்களுக்குப் பொருந்தாததாகவும் இருந்திருக்கிறது இருந்தபோதும் உள் நாட்டுத் தரகர்களை நம்பி அந்த உதிரிபாகங்களை இலங்கை அரசாங்கம் இது நாள்வரை கொள்வனவு செய்து கொண்டிருந்தது.

சீனாவுடனான ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு இருந்த போதும் பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட இதர நாடுகளிலிருந்தும் ஆயுதக் கொள்வனவு மேற்கொள்ளவும் இலங்கை அரசாங்கம் தீவிரமாக திட்டமிட்டுள்ளது.

இம்மாத இறுதியில் இந்த ஆயுதக் கொள்வனவுக்காக கோட்டபாய ராஜபக்ஷ பாகிஸ்தான் செல்கிறார். கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் இராணுவத்துக்கான பயிற்சி மற்றும் தள பாடங்களை பாகிஸ்தான் தொடர்ந்து வழங்கி வருகிறது.

அண்மையில் பாகிஸ்தான் 25 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான ஆயுதங்களை கடன் மூலமா இலங்கைக்கு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இ

# மீண்டும் பாரிய வேலை நிறுத்தம்; அரச ஊழியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் மீண்டும் பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

புதிய சம்பள விகிதம் தொடர்பிலான தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கடந்த வியாழக்கிழமை 200அரச ஊழியர் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தின. இதில் 3 இலட் சம் ஊழியர்கள் பங்கேற்றனர்.

இதனால் சுகாதாரம் , போக்குவரத்து, கல்வி மற்றும் தபால் துறை உள்ளிட்ட அரசாங்கத்தின் பல்வேறு துறைசார் பணிகளும் முடங்கின.

சுகாதாரத்துறையில் 70 ஆயிரம் ஊழியர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றதால் நாட்டின் ஒட்டு மொத்த மருத்துவமனைகளிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

போக்குவரத்து துறையின் 15 ஆயிரம் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர். 70 வீத மான ரயில் சேவை முடங்கி யது.

தபால்துறையில் 85 வீதமான ஊழியர்கள் பங்கேற்றதால் 1.5 மில்லியன் தபால்கள் விநியோகப் பணி முடங்கியது. இதனால் தபால் துறை தலைமையகமும் மூடப்பட்டது.

வடக்கு-கிழக்கு உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டன.

இந்த நிலையில் தங்களது கோரிக்கைகளை மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்ற முன்வரா விட்டால் மீண்டும் பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என்று பல்வேறு அரச ஊழியர் தொழிற்சங்கங்கள். எச்சரித்துள்ளன. (த)

# 'சலரோகம்' விவரண தொகுப்பு இறுவட்டு வெளியிடப்பட்டது









(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நேற்று சலரோகம் விவரணத்தொகுப்பு இறுவட்டு வெளியீட்டு விழா அருள் கரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும் ,யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.எ. ஞான சோதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் சோ. பத்மநாதன் இறுவெட்டின்விமர்சன உரையினை நிகழ்த்தினார். (கு-132, 133)

# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கே.டானியல் படைப்புக்கள் நூல் அறிமுக விழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நாவ லர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுகத்தை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தெனியான், கலாநிதி த.கலாமணி, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி செ. திருநாவுக்கரசு, க. தங்கவடிவேல் ஆகியோர் வழங்குவார்கள். (கு-9)

# தொலைநகல் இயந்திரம் அன்பளிப்பு

(நல்லூர்)

ஐக்கியராச்சியம் அமைப்பு நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு புதிய தொலைநகல் இயந்திரம் ஒன்றை வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஸ்ணதாஸிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (கு-134)

# வருடாந்த உற்சவம்

(நல்லூர்)

நெடுந்தீவு பிரதேச சபைக்குட்பட்ட கற்கட தீவு புனித அந்தோணியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்க்ள் நடைபெறும் .

நெடுந்தீவு பங்குத்தந்தை வண ஜீ.அருள் நேசன் அடிகளார் தலைமையில் திருப்பலி பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும் . (கு-134)


# மாதாந்த உதவிப் பணம்

(ஊர்காவற்றுறை)

தீவகம்வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான இம் மாதத்துக்குரிய மாதாந்த உதவிப் பணம் கடந்த 17 ஆம் திகதி முதல் ஊர்காவற்றுறை கிழக்கு வீதியிலுள்ள தபாலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. (த-72)







நேற்றுக்காலை 11.00மணியளவில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் பாதுகாவலன் மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும், திறந்து வைக்கப்பட்ட மண்டபத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.ரீ.ராஜா, திலீபன்பன் )

## இன்று ஒரு தகவல்

# புத்தரும் ஒரு கொலைகாரனும்

புத்தர் வாழ்ந்த காலத்தில் ஒரு பயங்கரமான கொலைகாரன் இருந்தானாம். கொலை, கொள்ளை எனப் பல பாவங்களை அவன் செய்தவன். அவனுக்கு திடீரென்று ஒருநாள் ஒரு ஆசை. என்ன ஆசை தெரியுமா? புத்தரைப் பார்க்க வேண்டும் இதுதான் அவனது ஆசை. இருந்தாலும் எப்படிப் பார்ப்பது? இவனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அதனால் நேரடியாகப் போய் புத்தரைப் பார்க்க வேண்டும் என்றால் யாரும் அனுமதிக்கமாட்டார்கள் என்ன செய்வது? யோசனை செய்தான்.

யாருக்கும் தெரியாமல் சுவர் ஏறிக்குதித்து மடத்திற்குள் போய்விடுவோம் என்று முடிவுசெய்துவிட்டான். உள்ளே போய் பார்த்தால் யாரையும் காணவில்லை. ஆள் நடமாட்டமே இல்லை. புத்தர் வெளியே போயிருந்தார். இவன் ஒரு மாதிரி அங்குமிங்கும் தேடியலைந்த சமயத்தில் ஒரு சீடரிடம் மாட்டிக்கொண்டான். அவர் என்ன சமாச்சாரம் என்று விசாரித்தார். "ஐயா நான் திருடுவதற்காக இங்கு வரவில்லை. என்னைத் தவறாக எண்ணாதீர்கள். புத்தரைப் பார்க்க வந்தேன். வாசல் வழியாக வந்தால் விடமாட்டீர்கள். அதனால் சுவர் ஏறிக் குதித்து வந்தேன். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம் புத்தரைப் பார்க்க வேண்டும்" அவ்வளவுதான் என்றான்.

உடனே அந்த சீடர் சாரிபுத்ரனிடம் இவனை அழைத்துக் கொண்டுபோனார். அவருக்கு மிகவும் ஆச்சரியம். 'என்ன எதற்காக இங்கே வந்தாய்?' என்றார். புத்தரைப் பார்க்க வந்தேன் எனறான். எதற்காக புத்தரைப் பார்க்க வேண்டும்?' என்றார். எனக்கு எல்லாமே வெறுத்துப்போய்விட்டது. என்னுடைய பாவங்களிலிருந்து நான் விடுபடவேண்டும். அதற்குப் பிராயச்சித்தமாக சந்நியாசி ஆகிவிடவேண்டும். மக்கள் தொண்டில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்றான்.

அங்கிருந்தவர்களுக்கு மிகவும் வியப்பாகிவிட்டது. "இவன் கொலை செய்தவன், கொள்ளை அடித்தவன், நிறைய பாவங்கள் செய்தவன் சந்நியாசியாவதற்கான தகுதி இவனுக்கு உண்டா?"என்று சந்தேகம் வந்தது. சோதிடம் மூலமாக அதைப் பார்த்து விடலாம் என்று நினைத்தார்கள். 'எந்தப் பிறவியிலாவது இவன் கொஞ்சம் புண்ணியம் செய்திருந்தாலும் போதும்' என்று நினைத்து சாரிபுத்ரன் ஜாதகம் பார்க்க ஆரம்பித்தார்.

அதன் பின்பு தான் தெரிந்தது பழைய பிறவியில் இவன் இதை விடமோசமாக இருந்திருக்கிறான். ஒரு துளி கூட நல்லது செய்ததில்லை. அதனால் இவனுக்கு விமோசனமே கிடையாது என்ற முடிவுக்கு வந்தார்கள். அது மட்டுமில்லை. இப்படியும் ஒரு ஜென்மமா... இவனை உடனடியாக வெளியே துரத்துங்கள் என்று சத்தம் போட்டார்கள்.

இவனுக்கு அதைக் கேட்டதும் கோபம் வரவில்லை. ஆனால் மனதிற்குக் கஷ்டமாக இருந்தது: புத்தரை நெருங்கக் கூட நமக்குத் தகுதியில்லை எனும்போது நாம் எதற்காக உயிர் வாழவேண்டும்? என்று தோன்றியது. தற்கொலை செய்யலாம் என்று நினைத்து வெளி மதில் சுவரில் தலையைமோதி உடைக்க ஆரம்பித்தான். அந்த சமயம் புத்தர் வெளியிலிருந்து உள்ளே வந்துகொண்டிருந்தார்.

தலையில் இரத்தத்தோடிருக்கும் இவனைப் பார்த்து தடுத்து நிறுத்தினார். புத்தரைப் பார்த்ததும் அவனுக்குப் பரவசம். காலில் விழுந்து அழுதான். புத்தர் ஆறுதல் சொன்னார். என்ன நடந்தது என்று கேட்டார். சொன்னான். "ஏன் இவனை விரட்டினீர்கள்?" என்றார். சீடர்கள் விபரத்தைச் சொன்னார்கள். இவனை ஒரு வாரத்தில் தகுதி உடையவனாக மாற்றிவிடமுடியும் என்றார் புத்தர். சீடர்களுக்கு நம்பிக்கை வரவில்லை. இவனைப் பார்த்து நீ என்னுடன் இருந்துகொள் என்றார் புத்தர்.

இவனுக்கு மிகவும் ஆனந்தம். இவன் ஒரு வாரத்தில் நல்ல மனிதனாக மாறிவிட்டான். அடக்கம், அமைதி, சாந்தம் எல்லாம் வந்துவிட்டது. சந்நியாசி ஆகும் தகுதி வந்துவிட்டது.

சீடர்களுக்கு மிகவும் ஆச்சரியம். எப்படி இந்த அதிசயம் நடந்தது? என்றார் சாரிபுத்ரன். இப்போது புத்தர் சொல்கிறார் "சாரிபுத்ரா... நீ நல்லவன். ஆனால் உனக்கு ஞானமில்லை. பாவங்களின் சுமை என்னவென்பது உனக்குத் தெரியாது. அதன் தவிப்பு எப்படி இருக்கும் என்பது உனக்குத் தெரியாது. உனக்கு அந்த அனுபவம் இல்லை. அது மட்டு மில்லை நீ ஜோசியத்தில் கடந்த காலத்தை மட்டும்தான் பார்த்தாய். இறந்தகாலம் என்பது இறந்து போன காலம் அது எதற்கு? எதிர்காலத்தை நினைத்துப் பார்க்கவேண்டும் அதை உருவாக்க வேண்டும். தன்னுடைய பாவச் சுமையிலிருந்து இறந்த காலத்திலிருந்து விடுபட இவன் பட்ட தவிப்புத்தான் இவனுக்கு விடுதலையைத் தேடிக் கொடுத்திருக்கிறது" என்றார் புத்தர்.

நல்லவர்களை விட குற்றவாளிகள் தான் விரைவில் பக்குவ நிலையை அடைய முடியும்: தம்மை நல்லவர்களாக நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு விமோசனமும் பரிபக்குவமும் சுலபமாக சித்திப்பதில்லை. இதைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திப்பதில்லை. இதைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


நான் ஒரு சிறு பையனைப் பார்த்துக் கேட்டேன் "நாம் செய்யும் பாவங்களையெல்லாம் கடவுள் மன்னிக்க வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?" என்றேன். "கடவுள் நமது பாவங்களை மன்னிக்க வேண்டுமென்றால் முதலில் நாம் பாவங்களைச் செய்யவேண்டும் சார். அப்போதுதான் அதை அவரால் மன்னிக்கமுடியும்" என்கிறான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மனித நேயம் இல்லாத இலங்கைப் பொலிஸார்!

## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் சாடல்

(கிளிநொச்சி)



மனித நேயம் உடைய காவல்துறையாக இலங்கைப் பொலிஸார் இல்லை என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் சாடியுள்ளார்.

தமிழீழ காவல்துறைப் படையணியின் புதிய அணிக்கான பயிற்சி தொடக்க நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு சாடியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மனிதர்களை மனிதர்களாக மதிக்கின்ற மனித நேயம் உடைய காவல்துறையாக இலங்கைப் பொலிஸார் இல்லை. ஆகையால்தான் இன்று ஊழல், இலஞ்சம் ஆகியவற்றில் படுமோசமாகவும் மனித உரிமைகளை மீறுகின்ற காவல்துறையாகவும் பொலிஸார் உள்ளனர் என்று அமெரிக்கா இராஜாங்க செயலகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

சிங்களப் பேரினவாத அரசினுடைய படுமோசமான கொள்கைகளை பொலிஸார் நடைமுறைப்படுத்தியதால் தான் எமது விடுதலைப் போராட்டம் தொடங்கியது.

அரசின் பிற போக்குத்தனமான கொள்கைகளைத் திணித்தமையினால்தான் ஊழல், கையூட்டுக்கள் பொலிஸாரிடம் ஊறி வளர்ந்துள்ளது.

சிங்கள மக்களையும் இன்று அது சித்திரவதை செய்கிறது. எமது விடுதலைப் போராட்டம் நியாயமான போராட்டம். மக்களின் மனித உரிமைக்கான போராட்டம். உண்மையான அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான எமது போராட்டத்தை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

அண்மையில் நடந்த ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் பிரதிபலிப்பும் கூட எமது போராட்டத்தை அங்கீகரிக் கும் அளவுக்கு கொண்டு போகும். ஏனெனில் சர்வதேச சமூகத்திற்கு முன்னால் இலங்கை அரசினுடைய பிரதிநிதிகள் ஒன்றைக் கதைத்துவிட்டு இங்கு வந்து அதற்கு எதிர் மாறான கருத்துக்கள், அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

சிங்களத்தின் உண்மை முகத்தை சர்வதேச சமூகமும் உணரத் தொடங்கிவிட்டது. எமது தேசியத் தலைவர் காலத்தில் அவரின் விடுதலைத் தத்துவத்தின் கீழ் அவரின் கோட்பாட்டின் அடிப்படையில் எமக்கான விடுதலை கிடைக்கும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது என்றார். (கு)

# சம்பிக்க ரணவக்கவின் கூற்று தமிழ் மக்களை அழிக்க எடுக்கும் முயற்சியாகவே அமைகிறது

## திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(கிளிநொச்சி)



**ஜாதிக ஹெல உறுமய கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்கவின் கூற்று தமிழ் மக்களை இந்நாட்டில் இருந்து அழிப்பதற்கு எடுக்கும் முயற்சியாகவே அமைகின்றதென திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**

மூதூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினருடனான சந்திப்பு ஒன்று கணேசபுரம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அரசியல் பொறுப்பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு இலட்சத்து 125 ஆயிரம் இராணுவத்தினரால் தாக்குப்பிடிக்க முடியாத நிலையிலேயே விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்கு வந்தது. ஆனால் விடுதலைப் புலிகளை அழிக்க தாங்கள் 10 ஆயிரம் பேரை புதிதாக இராணுவத்தில் இணைத்து புலிகளை அடக்குவோம் எனத் தெரிவித்திருப்பதாவது தமிழ்மக்கள் மீதான ஆவேசத்தைக் காட்டுவதாக இருக்கின்றது.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் உள்ள 40 ஆயிரம் படைவீரர்களை விடுதலைப் புலிகள் கொன்றால் கொழும்பில் உள்ள 4 இலட்சம் தமிழ் மக்களது பிரேதப் பெட்டிகளை நாங்கள் வன்னிக்கு அனுப்பி வைப்போம் என்று தெரிவித்துள்ளார்.

படையினர் மீதான தாக்குதல்களுக்கு தமிழ்மக்கள் பலியாக்கப்பட முடியாது. எமது மக்களின் பிரதேசங்களை ஆக்கிரமித்து அவற்றை உயர் பாதுகாப்பு வலயம் என்று இராணுவத்தினர் கூறிவருகின்றனர்.

அவ்வாறான இடங்கள் மீட்கப்படவேண்டும். இதற்காக போரிடும் நாம் படைகளை கொன்றால் தமிழ் மக்கள் கொல்லப்படுவார்கள் என்று தெரிவித்திருப்பது ஆயுதமின்றிய மக்கள் மீதான இவ்வாறான பேச்சுக்கள் நாம் எங்களது நிலங்களை மீட்டெடுத்தே ஆக வேண் டும் என்ற எண்ணத்தினை மேலும் வலுப்படுத்துகின் றன என்றார். (கு)

# கணக்காய்வு அறிக்கைகளால் அரச சேவைகள் பாதிப்பு!

## திறைசேரி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சில கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஊடாக அரச சேவைகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களால் அரச சேவை செயற்பாடுகளின் மதிப்பு குறைவடைந்துள்ளதாக திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

சில கணக்காய்வு அறிக்கைகளினூடாக அரச சேவைகள் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் அந்தத் தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கு விசாரணைகளுக்குரிய நிறுவனங்கள் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த ஒரு பிரிவினால் தொடர்ச்சியாக அரச சேவைகள் பற்றிக் குறை கூறப்பட்டு வருமாயின் வரும் காலத்தில் அரச சேவைகளை நிர்வகிப்பது பெரும் சவாலாக விளங்கும். வர்த்தக ரீதியில் போட்டியிட வேண்டிய அரச வர்த்தக வங்கிகள் இத்தகைய குற்றச்சாட்டுக்களுடன் நிர்வாகம் செய்வது பெரும் சிக்கலானது.

இத்தகைய சில அறிக்கைகள் கூறும் அளவிற்கு அரச சேவைகள் மோசமடையவில்லை. இத்தகைய அறிக்கைகளால் அச்சமுறும் ஊழியர்கள் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான செயற்பாடுகள் குறித்து தீர்மானங்களை எடுப்பதிலிருந்து விலகியிருக்கின்றனர்.

இந்நிலையானது தேசிய அபிவிருத்தி முயற்சிக்கு பாதிப்பினை ஏற்படுத்தலாம்.

கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் ஆணைக்குழு அறிக்கைகள் பற்றி அச்சமின்றி அரச சேவையாளர்கள் செயற்படுவது வடக்கு -கிழக்கு பிரதேசங்களில் மட்டுமே என்றார். (து)

# வீடுகள் கையளிப்பு

போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்காக ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சின்னக் குளம் என்னும் இடத்தில் அமைக்கப்பட்ட 30 வீடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

ஜேசு அகதிகள் சபை (ஜேஆர்எஸ்) 3 இலட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் இவ் வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

இதன் திறப்பு விழா நிகழ்வுகளின் போது திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தேசியக் கொடியினையும், உதவி அரசாங்க அதிபர் க.உமாமகேஸ்வரன் மங்கள விளக்கினையும் ஏற்றி வைத்தனர். ஜேஆர்எஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் வணக்கத்திற்குரிய லில்லி ஜோசெப்பும், சி.எழிலனும் சம்பிரதாய பூர்வமாக வீடுகளை திறந்து வைத் தனர். (து)

### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான

# சட்டங்களை திருத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஐ.தே.க எதிர்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான சட்டதிட்டங்களில் அவசர திருத்தங்களைக் கொண்டுவர அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி தமது கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளது.

இத்திருத்தச் சட்டத்தின்படி பெரும்பான்மைப் பலம் இல்லாத கட்சிகள் கூட ஒன்றிணைந்து உரிய உள்ளூராட்சிசபையை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர முடியும்.

இந்நிலையில் அரசாங்கத்தின் இந் நடவடிக்கைக்கு தமது கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய, இச்சட்டம் திருத்தப்படும் பட்சத்தில் சகல வழிகளிலும் தமது கட்சி எதிர்ப்பினை வெளியிடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

மக்களின் விருப்பத்திற்கெதிரான இம் மாற்றத்தினை அரசாங்கம் மேற்கொள்ளும் பட்சத்தில் பாராளுமன்றத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளைத் தடுக்கப்போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-4)


## பெண்கள் தினவிழாவும் கண்காட்சியும்













யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவின் ஏற்பாட்டில் 2006ஆம் ஆண்டுக்கான அனைத்துலக பெண்கள்தின விழாவும் மனைப் பொருளியல் பொருட்கண்காட்சியும் பயிற்சி பெற்ற மகளிர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு மாவட்டக் கூட்டுறவுச்சபையின் மகளிர் குழுத் தலைவி ரதி சோதிலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக இசைத் துறைத் தலைவர் பாக்கியலக்சுமி நடராசா முதன்மை விருந்தினராகவும், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை தலைவர் பெ.கனகசபாபதி, யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை, பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (க-132, 133)

# புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தனித்துவமான அம்சங்களை கொண்டவை

## புதிய நோர்வேத் தூதுவர் ஹன்ஸ்ஸன்

சர்வதேச நாடுகளின் இனப்பிரச்சினைகளை விட இலங்கை இனப்பிரச்சினை தனித்துவமானது என்று இலங்கைக்கான நோர்வேயின் புதிய சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்ஸ்ஸன் பெளயர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜோன் ஹன்ஸ்ஸன் பெளயர் மேலும் கூறியதாவது,

இலங்கைப் பயணம் தொடர்பாக அமைச்சர் எரிக் சொல்ஹெய்முடன் ஆலோசனை நடத்தி வருகிறோம். பயணத்துக்கான திகதி முடிவுசெய்யப்படவில்லை.

ஜெனீவாவில் அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்னர் இலங்கைக்கு பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளோம். அமைச்சர் எரிக்சொல்ஹெய்முடன் இணைந்து இந்தப் பயணத்தை மேற்கொள்வது பற்றியும் ஆலோசித்து வருகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தனித்துவமான அம்சங்களைக் கொண்டவை. இலங்கையின் அமைதி முயற்சிகளை ஏனைய நாடுகளின் அமைதி முயற்சிகளுடன் ஒப்பிட முடியாது. இது தனித்துவமான அம்சங்களை உள்ளடக்கியது. அவற்றை கவனத்தில் கொண்டே இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும்.

பலஸ்தீனத்தில் மட்டுமல்லாது வேறும் பல நாடுகளின் சமாதான முயற்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட நீண்ட அனுபவம் இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் என்று நம்புகிறோம்.

ஏனைய நாடுகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கிடைத்த அனுபவங்களை இலங்கையின் சமாதான முயற்சிகளில் அப்படியே பிரயோகிக்க முடியாது. இலங்கையின் தனித்துவமான பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே இந்த முயற்சியை முன்னெடுத்துச்செல்ல விரும்புகிறோம் என்றார் அவர். (கு)

## எழுத்துப் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தாதியாசிரியர் மற்றும் இதயம், நுரையீரல்களுக்கு மருந்தேற்றும் அலுவல்கள் ஆகிய பதவிகளுக்காக சுகாதார நலன் பேணல் மற்றும் போசாக்கு அமைச்சினால் நேற்று நடாத்தப்படவிருந்த எழுத்து மூலப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

தபால் சேவையில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே இந்த பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக சுகாதார நலன்பேணல் மற்றும் போசாக்கு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 9 ஆம் திகதி மருதானை தொழில்நுட்பக் கல்லூரியிலும், காசில் வீதி மகளிர் வைத்தியசாலை, கந்தானை தாதியர் கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெறுமென்று அமைச்சின் உதவி ஊடகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-9)

## சட்டவிரோத மது விற்பனை; குற்றவாளிக்கு இரு வருடசிறை

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரை யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்து யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது தண்டப்பணமாக ஒரு இலட்சம் ரூபாவும் 2 வருட சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

அவ்வாறு தண்டப்பணம்செலுத்தத் தவறின் மேலதிகமாக ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா அறிவித்தார்.

(க-132,133)

### வடக்கு-கிழக்கில்

# விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீண்டும் திறப்பு?

வடக்கு-கிழக்கில் தங்கள் அரசியல்துறை அலுவலகங்களை மீண்டும் திறக்க தமிழீழ விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த நாளேட்டில் நேற்று இது குறித்து வெளியான செய்தியில்,

கடந்த ஆண்டு நடந்த வன்முறைகளையடுத்து மூடப்பட்ட தங்கள் அரசியல் அலுவலகங்களை மீண்டும் திறக்கவுள்ளதாக நோர்வே அனுசரணையாளர்களூடாக இலங்கை அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பின் போது இதனை விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருக்கும் அரசியல் அலுவலகங்களை இந்த வாரத்தில் திறக்கவுள்ளதாகத் தெரிகிறது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நிராயுதபாணிகளாக இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசியல் பணிகளை மேற்கொள்ளலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)









யாழில் நேற்றைய தினம் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவுதின நிகழ்வுகளிலிருந்து... (படங்கள்:-எஸ்.ரி.ராஜா)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## பரீட்சை நேரம்

சரியாக ஐந்து மணிக்கு எழுந்துகொண்ட பிரபுவும் பிரியாவும் பாடப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினார்கள்.

பரீட்சைக்கு இன்னும் சில நாட்களே இருக்கிறது. பிரபு ஒன்பதாம் வகுப்பும், பிரியா ஏழாம் வகுப்பும் படிப்பவர்கள். படிப்பில் இருவரும் கெட்டிக்காரர்கள். அம்மா அவர்களுக்கு தேனீர் கலந்துகொண்டு வந்து கொடுத்தார்.

லைற் வெளிச்சத்தால் அப்பாவும் கண்விழித்தார். அவர் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கிறார். மாலை ஆறுமணியிலிருந்து நள்ளிரவு பன்னிரெண்டு மணி வரை வேலை. அதை முடித்து விட்டு ஒரு மணிக்குத்தான் வந்து படுத்தார்.

"என்னப்பா தூக்கம் கலைஞ்சு போச்சா? நீங்க படுங்கோப்பா. நாங்கள் லைற்றை அணைத்துவிட்டு கிச்சின் ரூமில் போய்ப் படிக்கிறோம்'' என்றாள் பிரியா.

"அங்கேபுழுக்கமாய் இருக்கும் இங்கேயே படியுங்கள்'' என்று அன்புடன் சொன்னார் அப்பா.

அவருக்குப் பிள்ளைகள் மீது உயிர். நாம்தான் படிக்காமல் இப்படி தொழிற்சாலையில் கடுமையாக வேலை செய்து கஷ்டப்படுகிறோம். நம் பிள்ளைகளாவது நன்றாகப் படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என நினைப்பவர். அதற்காக எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சமாளிக்கத் தயாராக இருப்பவர். அப்பா எழுந்து கதவைத் திறந்து வெளியே வந்தார்.

அது ஆறு குடியிருப்புகள் கொண்ட இடம். எல்லோருமே இவரைப் போல நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். பரீட்சை நேரம் என்பதால் எல்லா வீடுகளிலும் லைற் எரிந்துகொண்டிருந்தது.

"என்ன உங்களுக்குத் தூக்கம் வரேல்லையா?'' என்று குரல் வர தலையைத் திருப்பினார். பக்கத்துவீட்டுக்காரர் சிரிப்புடன் நின்றிருந்தார்.

ஆமாம்என்றார்அப்பா. "எனக்கும் தூக்கம் போச்சு. இன்னும் கொஞ்ச நாளைக்கு இதே கதை தான்"என்றார் அவர்.

நம் பிள்ளைகள் படிப்புக்குத் தானே தூக்கத்தை விடுகிறோம்.



அவர்கள் நல்லாப் படித்து பெரியவர்களா வந்தால் சந்தோஷம்தானே?'' என்றார்.

"பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார்களோ இல்லையோ இந்த மாதம் கரண்ட் பில்அதிகமாவரும். ஏனென்றால் நிறைய நேரம் லைற் எரியுது'' என்று சொன்னார் பக்கத்து வீட்டுக்காரர்.

படித்துக் கொண்டிருந்த பிரபுவும் பிரியாவும் இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

அவர்களுக்கு அப்பாவின் கஷ்டம் புரிந்தது. அதனால் தான் அதிக செலவு வைக்காமல் மிகவும் தேவையானதை மட்டுமே வாங்குவார்கள்.

பிரபுவுக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. அதை முதலில் பிரியாவிடம் சொன்னான்.

''அட நல்ல ஐடியாவா இருக்கே. ஆனா மற்றவர்கள் இதற்குச் சம்மதிப்பார்களா?'' என்று சந்தேகத்துடன் கேட்டாள்.

"நல்ல விஷயத்தை எதற்கு மறுக்கப் போகிறார்கள். சொல்லித்தான் பார்ப்போமே'' என்றான் பிரபு.

"முதலில் அப்பாவிடம் சொல்வோம்'' என்றாள் பிரியா.

''இரண்டு பேரும் படிக்கிறதை விட்டுவிட்டு என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தார் அப்பா.

"அப்பா, நீங்களும் பக்கத்து வீட்டு அங்கிளும் பேசினதைக் கேட்டதும் எனக்கொரு யோசனை வந்தது. அதைச் செய்தால் கரண்டை மிச்சப்படுத்தலாம். என்றான்'' பிரபு.

"என்ன யோசனை?''என்று கேட்டார் அப்பா.

"பரீட்சை நெருங்கிவிட்டதால் எல்லா வீடுகளிலும் இந்நேரம் லைற் எரியுது. எல்லோரும் தனித்தனியா அவரவர் வீட்டில் இருந்து படிக்கிறதை விட எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தர் வீட்டுக்குப் போய் படிக்கலாம். இதனால் மற்ற வீடுகளில் லைற் எரியிற அவசியம் இல்லை'' என்றான்.

''நல்ல யோசனைதான். கரண்ட் மிச்சம் ஆகிறதோடு இதில் இன்னொரு நன்மையும் இருக்கு. ஒன்றாச் சேர்ந்து படிக்கும்போது யாருக்காவது சந்தேகம் வந்தால் இன்னொருத்தரிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்'' என்றார் அப்பா.

அவர் மற்ற வீட்டுக்காரர்களிடமும் இந்த யோசனையைச் சொல்ல அனைவரும் சந்தோஷமாகச் சம்மதித்தார்கள். அடுத்த நாள் முதலே அதைச் செயற்படுத்தவும் தொடங்கினார்கள். பிரபுவையும் பாராட்டினார்கள்.

## ராஜாராம் மோகன்ராய்



(1772-1833): இந்தியாவின் புகழை வெளிநாடுகளில் நிலைநிறுத்தியவர்களுள் ஒருவர் ராஜாராம் மோகன்ராய். சமூக சீர்திருத்தவாதிகளுள் இவர் முதன்மையானவர். பெண்களுக்குச் சமஉரிமை கிடைக்கப் பணியாற்றியவர்.

இவர் மேற்கு வங்காளத்தில் பர்துவான் மாவட்டத்தில் ராதாநகர் என்னுமிடத்தில் பிறந்தார். இளமை முதல் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறப்புற்று விளங்கினார். இவர் தம் தாய் மொழியாகிய வங்காளி மொழியுடன் ஆங்கிலம், பாரசீகம், அரசு முதலிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார்.

இவர் காசிக்குச் சென்று சமஸ்கிருத மொழியையும் வேத நூல்களையும் கற்றார். பௌத்த நூல்களைக் கற்க விரும்பித் திபெத்துக்குச் சென்று பாலிமொழியைப் பயின்றார். இருபதாம் வயதில் ராம் மோகன்ராய் தயாகம் திரும்பினார்.

கடவுளைப் பல வடிவங்களாலும் பெயர்களாலும் வழிபடுவதை விரும்பாமல் அருவமான (உருவமற்ற) நிலையில் பரம்பொருளை வணங்குவதற்கென்று 'பிரம்ம சமாஜம்' என்ற சமய வழிபாட்டு இயக்கத்தை 1828இல் தோற்றுவித்தார். அதன் காரணமாக எல்லாச் சமயங்களிலும் சீர்திருத்தங்கள் தோன்றின.

அக்காலத்தில் கணவன் இறந்தபின் மனைவி சதி என்னும் உடன்கட்டை ஏறும் கொடிய வழக்கம் இருந்தது. அதை நிறுத்த ராம்மோகன்ராய் அரும்பாடுபட்டார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்றும் இவர் வாதாடினார்.

அப்பொழுது டெல்லியில் ஆண்ட மொகலாய மன்னர், ராம் மோகன் ராய்க்கு 'ராஜா' பட்டம் அளித்தார். அவருடைய தூதுவராக 1830இல் இவர் இங்கிலாந்து சென்றார். அங்கிருந்தபோது இந்திய மக்களுக்கு ஆங்கிலேயர் செய்ய வேண்டிய பல நன்மைகளைக் குறித்துப் பிரசாரம் செய்தார். மூன்றாண்டுகளுக்குப் பின் இவர் நோயுற்று இங்கிலாந்திலேயே காலமானார்.

## விடுகதைகள்

1. உணவை எடுத்தாலும் உண்ண மாட்டான் அவன் யார்?
2. ஓங்கிய குரலில் ஊரையே எழுப்புவான் அவன் யார்?
3. ஒற்றைக்காலில் ஆடுவான் ஆட்டம் நின்றால் சாய்ந்து விடுவான் அவன் யார்?
4. ஓட்டுக்குள்ளே வீடு வீட்டுக்குள்ளே கூடு அது என்ன?
5. காலில்லாதவன் பாய்ந்து தாவுவான் அவன் யார்?
6. கிளை இல்லாத மரம் வெட்ட வெட்ட வளரும் அது என்ன?
7. சிவப்பு பெட்டிக்குள் சின்னச் சின்ன சேதிகள் அது என்ன?
8. பவள நிறத்தழகி பதுங்கியே இருப்பாள் அவள் யார்?
9. சேற்றுக்குள்ளே செங்கோழி முட்டை அது என்ன?
10. தலைக்கு கவசம் உயிருக்கு உத்தரவாதம் அது என்ன?

## உங்களுக்குத் தெரியுமா?

*ஆசியாக் கண்டத்திலேயே முதல் முதலாக ரீ.வியை அறிமுகப்படுத்திய நாடு தாய்லாந்து.

*சூரியனைத் தவிர மற்ற கிரகங்கள் எதற்கும் ஒளி இல்லை.

*பரசூட் மூலம் முதலில் குறித்த உயிரினம் நாய்.

*வாயில் எச்சில் ஊறாவிட்டால் பேசவோ சாப்பிடவோ முடியாது.

*உலகில் கொரியா நாட்டு மக்களின் உடலில் மட்டும் நாற்றம் இருப்பதில்லை.


*தூய்மையின் மண் என்று அழைக்கப்படும் நாடு பாகிஸ்தான்.

*காலை நேரத்து அமைதி நாடு என்று அழைக்கப்படுவது கொரியா.

*மனித உடலில் நீளமான எலும்பு தொடை எலும்பு. சிறிய எலும்பு காது எலும்பு.

*ஐரோப்பா கண்டத்தில் பிறந்து ஆசியாக் கண்டத்தில் இறந்து ஆபிரிக்கா கண்டத்தில் புகைக்கப்பட்ட மன்னர் அலெக்சாண்டர்.

## பெரிய கரடி





ஏழு நட்சத்திரங்களின் தொகுப்பான சப்தரிஷி மண்டலத்தை ஆங்கிலத்தில் 'கிரேட் பேர்' என்பர். லத்தீனில் 'உர்ஸா மேஜர்' என்பர். உர்ஸா மேஜர் என்றால் 'பெரிய கரடி' என்று அர்த்தம்.

பழங்காலத்தில் சப்தரிஷி மண்ட்லத்தை சமஸ்கிருதத்தில் 'மகாரிக்ஷம்' என்றழைத்தனர். ரிக்ஷம் என்றால் நட்சத்திரம் என்று பொருள். அரேபியா போன்ற இடங்களிலிருந்து வந்த வான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் மகா ரிக்ஷம் என்பதன் பொருளை ஆராய்ந்தனர்.

ரிக்ஷம் என்றால் சமஸ்கிருதத்தில் கரடி என்றும் ஒரு பொருள் உண்டு. ஆகவே மகாரிக்ஷம் என்ற சப்தரிஷி மண்டலத்தை பெரிய கரடி என்று மொழிபெயர்த்து விட்டனர்.

கல்வியறிவும் பகுத்தறிவும் வாழ்க்கையின் நம் உண்மையான துணைவர்கள்.
-கலீல் கிப்ரான்.

அறியாமையைக் காட்டிலும் மோசமான அடிமைத்தனம் எதுவும் இல்லை.
-பெரியோர் வாக்கு.

### விடைகள்

விடுகதைகள்

| | |
|---|---|
| 1.அகப்பை | 2.சேவல் |
| 3.பம்பரம் | 4.ஆமை |
| 5.மீன் | 6.தலைமுடி |
| 7. தபால்பெட்டி | 8.நாக்கு |
| 9.வெங்காயம் | 0.ஹெல்மெட் |

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

1

# பிணக்கில் பிள்ளைகள் படும் பாடுகள்

போர்களும் பிணக்குகளும் பிள்ளைகளின் ஒவ்வொரு உரிமைக்கும் பங்கமுண்டாக்குகின்றன குடும்பத்தவர்களுடனும், சமுதாயத்தவர்களுடனும் கூடிவாழும் உரிமை. தனிச்சிறப்புடைய தம் ஆளுமைய்யை விருத்தி செய்யும் உரிமை, சுகவாழ்வுக்கு உரிமை, கல்வி கற்கும் உரிமை.

சிலசமயங்களில் உயிர்வாழும் உரிமை கூட பிணக்கின் போது பறிக்கப்படுகின்றன. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற ஆயுதப் பிணக்கினாலும் சுமார் 900,000 பிள்ளைகள் நேரடியாக அவதிப்பட்டிருக்கிறார்கள்.

அத்துடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் மில்லியன் கணக்கான பிள்ளைகள் மறைமுகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். 380,000 பிள்ளைகள் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் திரும்ப திரும்ப இக்கதிக்குள்ளாகியுள்ளார்கள். தற்போது 250,000 வரையான பிள்ளைகள் புலம்பெயர்ந்து அவதிப்படுகிறார்கள். பல இடங்களில் சுகாதார சேவைகள், பாடசாலைகள் ஆகியன மிக மோசமாகச் சீர்குலைந்துள்ளன.

தொற்றுநோய்கள் குறிப்பாக மலேரியா நாட்டின் ஏனைய பாகங்களைப் பார்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய அளவில் பெருகியுள்ள நோய் நொடி, புலப் பெயர்வு, அன்றாட உணவு விநியோகச் சீர்குலைவு ஆகியவற்றுடன் போசாக்கின்மையும் சேர்ந்து அப்பாவிப் பிள்ளைகளை அல்லற்படுத்துகின்றன.

பாடசாலை வகுப்புகளில் இட நெருக் கடியால் அவர்கள் அவதிப்படுகிறார்கள். ஆசிரியர் பற்றாக்குறை மற்றுமொரு பிரச்சினை. பெயர் பதிந்த பிள்ளைகளில் 40 சதவீதமானோர் வரை பள்ளிக்கூடம் செல்வதில்லை. ஆயிரக் கணக்கான பிள்ளைகள் தம் பெற்றோரில் ஒருவரையோ இருவரையுமோ இழந்திருக்கிறார்கள். பலர் குரூரச் செயல்களை நேரில் கண்டிருக்கிறார்கள்.

அனேகமாக எல்லாப் பிள்ளைகளுமே பயத்தையும், சஞ்சலத்தையும் அனுபவித்திருக்கிறார்கள். இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு அரசாங்கமும், மனித நேயமுகவரகங்களும், உணவும் நிவாரணப் பொருள்களும் வழங்கி வந்தாலும் பாதுகாப்புக் காரணங்களினாலும் போக்குவரத்து மற்றும் தடைகளினாலும் அவற்றின் விநியோகம் தாமதமாகின்றன அல்லது மட்டுப்படுத்தப்படுகின்றன.



பல பகுதிகளில் பிள்ளைகள் பிணக்கைத் தவிர உலகில் வேறொன்றும் இல்லை என்ற மயக்கத்தில் இனவாரியான சிந்தனையும், போர்குணமும் கொண்டவர்களாய் வளர்ந்து வருகிறார்கள். பலர் பிணக்கில் தீவிரமாக இறங்க வேண்டி ஏற்பட்டுள்ளது. சிறுமிகளும் பெண்களும் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு மானபங்கமடைந்துள்ளார்கள். ஆற்றாமை காரணமாக சலுகைகளையும், உதவிகளையும் பெறும் பொருட்டு பாலியல் பலாத்காரங்களுக்கு இடங்கொடுப்போர் பலர். மிதிவெடிகள், பீரங்கிக் குண்டுகள் மாதந்தோறும் குடிமக்கள் பலரை பலியெடுக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் பிள்ளைகளே.

இலங்கையில் பிணக்கினால் இலட்சக்கணக்கான பிள்ளைகளின் வாழ்க்கை ஏற்கனவே பாழாகிப்போயிருக்கிறது. சமூகக் கட்டமைப்புகள் சீர்கெட்டமை மற்றும் பிள்ளையின் உடல், உள, உணர்வார்ந்த, ஒழுக்க, விவேக, சமூக, ஆத்மார்த்த வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள உறவுகள் தறிகெட்டுப்போனமை பிள்ளையின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்லாமல் முழுச் சமுதாயத்தையுமே நாசமாக்கி வருகின்றன.

### பிள்ளைப் பருவம் மனித உரிமையாகும்

ஆயினும் இதைவிடப் பாரதூரமான உரிமை மீறல் பிள்ளையின் பாலப்பருவத்தையே பறித்தெடுப்பதாகும். பெரியவர்களாகி வாழ்க்கையின் பொறுப்புக்களாலும், சுமைகளாலும் நசுக்குவதற்கு முற்பட்ட வளர்ச்சிக் காலமே பாலப்பருவம். பாலப்பருவ அனுபவங்களே வளர்ந்த பின் எமது குண இயல்புகளை நிர்ணயிப்பன. ஆயுதப்பிணக்குச் சூழ்ந்த சுற்றாடலில் வளரும் பிள்ளைக்கு கவலையில்லாமல் விளையாடவோ, பிள்ளைப் பருவ நாட்டங்களில் களிப்படையவோ, தோழமை பூணவோ, தனித்திருக்கவோ அவகாசம் கிடைப்பதரிது.

பிள்ளை விரைவாக முதிர்ச்சியடைந்து விடுகிறது. வளர்ந்தவர்களின் அச்சங்கள், சஞ்சலங்கள், விரக்திகள் வெறுப்புகள் யாவும் அதைப் பீடித்துக் கொள்கின்றன இவை கட்டுமீறிப் போகவும் கூடும். ஏனென்றால் பெரியவர்களைப் போல நிதானத்தைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய மாற்று அனுபவங்களும், முதிர்ச்சியும் அந்தப் பிள்ளைக்கு இல்லாமல் போய் விடுகின்றன. இன்றைய பிள்ளைகள் நாளைய பெரியவர்களாகும் போது இயல்பாக பாலப் பருவத்தின் தழும்புகள் பிணக்கின் ஆணிவேரை இனங்காண இடமளிக்காது போகலாம்.


### சமாதானத்துக்காகப் பணியாற்றுவோம்

இன்றுபாலப்பருவத்தைப்பறிகொடுத்து வரும் பல இலட்சக் கணக்கான பிள்ளைகளைக் காப்பாற்றி மீட்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுமாறு ஆக்கப் பணிக்கு ஓர் அமைப்பு உங்களுக்கு அழைப்பு விடுகிறது. பிள்ளைகளே சமாதானத்தின் சரணாலயங்கள் என்னும் கொள்கையை எமது அன்றாட பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கடைப்பிடித்தோமானால் பாலப்பருவத்தின் உரிமையைப் பேணுவதுடன் அமையாது எமது பிள்ளைகளைக் காப்பாற்றக்கூடிய தான சமாதானத்துக்கே அத்திவாரம் அமைப்பவர்களாவோம்.

### பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளும் போர்ச் சாதனங்களும்

ஆயுதப்பிணக்குகளில் எந்தவகையிலும் தள்ளப்படாதிருக்கும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு என்னும் கொள்கை ஆயுதப்பிணக்கில் பிள்ளைகளை நேரடியாக ஈடுபடுத்துதல், தொடர்பானது மட்டுமல்ல எதிரிகளை அவமதிப்பதற்கு பிள்ளைகள் சார்ந்த பிரச்சினைகளை பயன்படுத்துதலையும் அடக்கியதாகும். அவ்வாறான நடவடிக்கைகள் ஆயுதப் பிணக்கும் பிள்ளைகளின் துன்பமும் தொடர்ந்து நீடிப்பதற்கே வழி வகுக்கும். ஐ.நா அறிக்கையின்படி ஆயுதப் பிணக்குகளில் பிள்ளைகள் படும் பாட்டுக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளும் குற்றவாளிகளும் ஆகிறோம் இந்த ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பானது; பிணக்கில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு தரப்பினரும் பிள்ளைகளின் உரிமைகளைப் பற்றி குறிப்பிடுவதை வெகு கவனமாகத் தவிர்கிறது. அவ்வாறே இந்தக் கொள்கையினைக் கடைப்பிடிக்கும் சகல தரப்பினரும் பிள்ளைகளின் பிரச்சி னைகளை பிரச்சார நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதையும் தவிர்த்தல் வேண்டும். மாறாக சகல தரப்பினரும் தத்தமது வல்லமைக்கும் செல்வாக்குக்கும் ஏற்றவகையில் பிள்ளைகளுக்கு எந்த வகையில் உதவி செய்யலாமென் பதைக் கருத்திற் கொள்ளுமாறு தூண்ட ப்படுகிறார்கள்.

இதற்குப் பிணக்குடன் சம்பந்தப்படாதவர்கள் பிள்ளைகள் சமாதானத்தின் சரண்ணாயலங்கள் என்னும் செய்தியை சகல தரப்பினருக்கும் பரப்புதல் அவசியம். இந்தக் கொள்ளைகள் பின்பற்றப் படுவதையும் அவர்கள் அவதானித்தல் வேண்டும். (தொடரும்)





குடத்தனை ஜி.ரி.எம்.எஸ் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில்....

(படங்கள்: விஷ்ணு, சிவா)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை**

**யாழ்ப்பாணம்**

# இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானம் விழுந்து நொருங்கியது

## 2 விமானிகள் பலி

(பெங்களூர்)

இந்திய விமானப்படையின் விமானம் விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கியதில் 2 விமானிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.



கர்நாடக மாநிலம் பீதர் அருகே நேற்று முன்தினம் நடந்த இந்த விபத்து பற்றி மேலும் தெரிய வருவதாவது,

இந்திய விமானப்படையில் சூரிய கிரண் விமானப் பிரிவு இருக்கிறது. சூரியனின் கதிர்கள் என்ற பொருள்படும் பெயரைக் கொண்ட இந்தப் பிரிவில் நன்கு பயிற்சி பெற்ற விமானிகள் இருப்பார்கள். அவர்கள் மார்க்-2 ரக விமானங்களை பயன்படுத்தி வானில் சாகச நிகழ்ச்சிகளை செய்து காண்பிப்பார்கள்.

மணிக்கு 200 முதல் 600 கிலோ மீற்றர் வரை வேகத்தில் பறந்து வரும் இந்த விமானங்கள் வான்வெளியில் வர்ண ஜாலத்தை நிகழ்த்தும்.

இங்கிலாந்தின் சிகப்பு அம்புகள் (ரெட் ஆரோஸ்), கனடாவின் பனிப் பறவைகள் (ஸ்னோ பேட்ஸ்) போன்ற சிறந்த விமானப் படைப்பிரிவுகளைப் போல இந்தியாவின் சூரிய கிரணும் சர்வதேச அளவில் பெருமை பெற்ற அமைப்பாகும். இந்த அமைப்பு சார்பில் இதுவரை உலகம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட சாகசக் காட்சிகள் நடத்தப்பட்டு இருக்கின்றன.

நேற்று முன்தினம் காலை அவர்கள் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் சென்ற விமானங்கள் பீதர் அருகில் உள்ள நவுபாத் என்ற இடத்தில் காலை 9.20 மணி அளவில் பறந்துசென்ற போது ஒரு விமானத்தின் வால் பகுதி இன்னொரு விமானத்தில் மோதியது. இதில் ஒரு விமானம் குட்டிக்கரணம் அடித்து தலைகுப்புற கீழே விழுந்தது. துவரம் பருப்பு பயிரிட்டு இருந்த வயல் வெளியில் விழுந்த விமானம் விழுந்த வேகத்திலேயே தீப்பிடித்து எரிந்தபடி நொருங்கியது.

இதேவேளை, பயிற்சியில் ஈடுபட்டு இருந்த மற்ற விமானங்கள் பத்திரமாக தரை இறங்கின.

இந்த விமான விபத்தில் விமானத்தை ஓட்டிய விமானிகள் ஸ்குவாடரன் லீடர் சைலேந்திர சிங், விங் கமாண்டர் பாட்டியா ஆகியோர் அந்த இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்கள். (கு)

இந்திய வலம்

# டெல்லியைச் சேர்ந்த நேகா அழகியாக தேர்வு



இந்திய அழகியாக டெல்லியைச் சேர்ந்த நேகா கபூர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய அழகிப் போட்டி நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்றது. நாடுமுழுவதிலும் இருந்து 26 அழகிகள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.

இறுதிச் சுற்றுப் போட்டி நள்ளிரவு 12 மணிக்கு நடைபெற்றது.

இதில் டெல்லியைச் சேர்ந்த நேகா கபூர் இந்திய அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஆண்டு நடைபெறும் உலக அழகிப் (மிஸ் யுனிவர்ஸ்) போட்டியில் இந்தியா சார்பில் நேகா பங்கேற்பார்.

இதேவேளை, இந்தப் போட்டியில் 2ஆவது, 3ஆவது இடம் பெற்ற நடாஷா சூரி, அம்ரிதா பட்கி ஆகியோருக்கு முறையே பிமிஸ் இந்தியா வொர்ல்டு, மிஸ் இந்தியா எர்த் பட்டங்கள் சூட்டப்பட்டன. இந்தப் பிரிவுகளில் நடைபெறும் உலக போட்டிகளில் இவர்கள் பங்கேற்பார்கள். (கு)

# தேர்தலில் தனித்துப் போட்டியிட தி.மு.க - அ.தி.மு.கவுக்கு துணிவு இல்லை

## விஜயகாந்த்



என்னுடைய வளர்ச்சியால் பயம் வந்துவிட்டது. அதனால் தான் தேர்தலில் தனித்துப் போட்டியிட தி.மு.க - அ.தி.மு.கவுக்கு துணிவு இல்லை என்று தேசிய முற்போக்குத் திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் குற்றஞ்சாட்டினார்.

மதுரை நாகமலை புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேர்தல் பிரசாரத்தில் அவர் மேலும் பேசியதாவது,

தி.மு.க- அ.தி.மு.க ஆகிய இரு கட்சிகளுமே மக்கள் நலனில் அக்கறை காட்டவில்லை. இந்த இரு கட்சிகளையும் மாறி மாறி தேர்வு செய்தீர்கள். அவர்களுக்கு ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி சண்டையிடவே நேரம் போதவில்லை. இந்நிலையில் மக்கள் நலனில் எப்படி அவர்களால் அக்கறை செலுத்த முடியும்.

இரு கட்சிகளையும் எதிர்த்துத் தைரியத்தோடு தேர்தலில் களம் இறங்கியுள்ளேன். நீங்கள் தான் எனக்கு ஆதரவு தரவேண்டும் என்றார். (கு)

# அத்வானி, ராஜ்நாத் சிங்கின் ரத யாத்திரை திட்டமிட்டபடி தொடங்கும் என அறிவிப்பு

நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பா.ஜ.க. தலைவர்கள் அத்வானி ராஜ்நாத் சிங்கின் ரத யாத்திரைகள் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

அத்வானி குஜராத்திலிருந்தும் ராஜ்நாத் சிங் ஓரிசாவிலிருந்தும் தங்கள் யாத்திரைகளை ஆரம்பிக்கவுள்ளனர் என பா.ஜ. கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி இந்துக்களின் புனித நகரான காசியில் அடுத்தடுத்து இரண்டு குண்டு வெடிப்பு நடந்தது. இதில் 20 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். இந்தக் குண்டு வெடிப்பு சம்ப வத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த பா.ஜ.கட்சி உத்தர பிரதேச மாநில அரசும் மத்திய அரசும் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் மெத்தனமாக செயல்பட்டு வருவதால் தான் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நடப்பதற்கு காரணம் என கருத்து தெரிவித்தது.



சிறுபான்மை வாக்கு வங்கியை குறிவைத்தே இதுபோன்ற நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன என்றும் குற்றம் சாட்டியது.

இந்நிலையில் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் பா.ஜ.க. தலைவர்கள் அத்வானியும், ராஜ்நாத் சிங்கும் தேசிய ஒருமைப்பாட்டு ரத யாத்திரை நடத்தப் போவதாக அறிவித்தனர். இது நாடு முழுவதும் பெரும் சர்ச் சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் அத்வானி ரத யாத்திரை நடத்தியபோது பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன என ஆளும் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் விமர்சிக்கின்றனர். ரத யாத்திரைகளால் சமூக ஒற்றுமை பாதிக்கும். மதக் கலவரங்கள் ஏற்படலாம் என பார்லிமென்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஐந்து மாநிலங்களில் நடக்கவுள்ள சட்டசபைத் தேர்தலை குறிவைத்து அத்வானி ரத யாத்திரை நடத்துகிறார் என எதிர்க்கட்சிகள் கலக்கத்தில் உள்ளன.

இந்நிலையில் ரத யாத்திரை நடத்துவது குறித்து பா.ஜ. கட்சிக்குள்ளும் சங்கப் பரிவார் அமைப்பிற்குள்ளும் பரவலாக கருத்து வேறுபாடுகள் எழுந்து பின்னர் அடங்கின. தற்போது ரத யாத்திரைக்கான முறையான அறிவிப்பை அக்கட்சி மேலிடம் வெளியிட்டுள்ளது. கட்சியின் மூத்த தலைவர் வெங்கைய நாயுடு இது குறித்து அறிவிப்பை நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது,

அத்வானியின் தேசிய ஒருமைப்பாட்டு ரத யாத்திரை குஜராத்தில் உள்ள துவாரகாவில் ஏப்ரல் 6ஆம் திகதி துவங்குகிறது. குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, சட்டீஸ்கார், ம.ப ராஜஸ்தான், உப அரியானா மற்றும் டில்லி உட்பட 10 மாநிலங்களில் அத்வானி தனது ரத யாத்திரையை மேற்கொள்கிறார்.

இந்த ரத யாத்திரை ஐந்து ஆயிரத்து 800 கி.மீ.தூரம் நடத்தப்படுகிறது. சட்டசபை தேர்தல் நடக்கவுள்ள மாநிலங்களில் பிரசாரம் செய்து விட்டு 26 நாட்களில் தனது யாத்திரையை நிறைவு செய்கிறார். ராஜ்நாத் சிங்கின் ரத யாத்திரை ஒரிசாவில் உள்ள பூரியில் துவங்கி 24 நாட்கள் நடக்கிறது. 5ஆயிரம் கி.மீ. தூரம் இந்த யாத்திரை நடக்கிறது.

ஒரிசா, ஜாக்கண்ட், பீகார், இமாச்சல், காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட 22 மாநிலங்களுக்கு செல்லும்படி பயணத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இரண்டு யாத்திரைகளுமே கட்சி நிறுவப்பட்ட நாளான ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி துவங்கி இந்தியாவின் முதல் சுதந்திர போராட்ட தினத்தின் 149வது நிறைவு நாளான மே மாதம் 10ஆம் திகதி டெல்லியில் முடிவடைகின்றன.

அத்வானியின் ரத யாத்திரைக்கு கட்சியின் பொதுச் செயலர் அனந்தகுமாரும் ராஜ்நாத்தின் யாத்திரைக்கு கட்சி செயலர் விஜய் கோயலும் பொறுப்பு வகிப்பர். இவ்வாறு வெங்கையா நாயுடு கூறினார். (கு)

# தி.மு.க கூட்டணி போட்டியிடும் தொகுதிகள் பட்டியல் தயாரிப்பு

சட்டசபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் பட்டியல் தயாராகி விட்டது என்றும் இந்தப் பட்டியல் இன்னும் இரண்டு நாட்களில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தி.மு.க கூட்டணியில் உள்ள மார்க்சிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளுக்கான தொகுதி ஒதுக்கீடு செய்யும் பணி முடிவடைந்த நிலையில், காங்கிரஸ், பா.ம.க. விற்கான தொகுதிகளை ஒதுக்கீடு செய்வதில் உள்ள இழுபறியும் விரைவில் முடிவுக்கு வரும் என அறிவாலய வட்டாரம் நம்பிக்கை தெரிவித்தது.

தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ், பா.ம.க, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்



ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

தொகுதிப் பங்கீடு செய்வதில் ஆரம்பித்த சலசலப்பு காரணமாக கூட்டணியில் இருந்து வைகோ வெளியேறி அ.தி.மு.க வில் ஐக்கியமானார். அதன் பிறகு தொகுதிப் பங்கீடு ஒரு வழியாக முடிந்து தற்போது தொகுதிகளை ஒதுக்கீடு செய்யும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 48 தொகுதிகளும், பா.ம.க விற்கு 31 தொகுதிகளும், மார்க்சிஸ்ட் கட்சிக்கு 13 இடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 10 இடங்களும், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு மூன்று இடங்களும் என மொத்தம் கூட்டணிக் கட்சிகளுக்கு 105 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 129 தொகுதிகளில் தி.மு.க களம் இறங்குகிறது. அதி லும் நான்கு தொகுதிகளை உதிரிக்கட்சி களுக்கு கொடுக்க உள்ளது. (கு)



தேர்தல் வருவதால் அசாம் தலைநகர் கௌகாத்தியில் காங்கிரஸ் கட்சிக்கான கட் அவுட்கள் தயாரிப்பில் ஒருவர் ஈடுபடுகிறார்.



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்



# சுயசரிதை

79 மீள்பார்வை

என் தம்பி சண்முகத்தின் மூத்த மகன் முரளி. அவரும் அமெரிக்காவில் இருக்கிறார். அவர்களுக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். அவரைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். என் அண்ணன் தங்கவேலு இப்போது இல்லை. அவரும் இறந்துவிட்டார். என் தங்கை பத்மாவதி அவர் கணவர் வேணுகோபால் அவர்தான் எனது சாந்தி தியேட்டரை பல வருஷங்களாக நிர்வகித்து வருகிறார். அவர்களுக்கும் பெண் பிள்ளை பேரன் பேத்திகள் எல்லோரும் இருக்கிறார்கள்.

எனக்கு ஏராளமான பேரன் பேத்திகள் இருக்கிறார்கள் . உலகம் முழுவதும் எனக்கு நண்பர்களும் சுற்றத்தினரும் இருக்கின்றனர் . நான் ஒரு பெரிய குடும்பஸ்தன். முன்பெல்லாம் பெரும்பாலும் கலைஞர்களுடன் அல்லது நாட்டு மக்களுடனும் இருந்தேன். இப்போது ஓய்வுக் காலத்தில் என்னுடைய வீட்டு மக்களுடனும் சந்தோஷமாக இருக்கிறேன்.



இருந்தாலும் அவ்வப்போது சிறு உடல் நலக் குறைவு ஏற்படுகிறது. என் மனைவி கமலாவும் என் குடும்ப டாக்டர் ராதா கிருஷ்ணனும் நான் ஆரோக்கியமாக இருப்பதற்காக என்னை நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நேரம் கிடைக்கும் போது உங்களைப் போன்ற நல்ல நண்பர்களுடன் பேசி நல்ல விஷயங்களைப் பகிர்ந்து கொள்கிறேன் . நிறைய புத்தகங்கள் படிக்கிறேன். சில சமயங்களில் டி.வி. பார்க்கிறேன் . இதற்கிடையில் மரியாதை நிமித்தமாக சிலபேர் வந்து படங்களில் நடிக்கக் கூப்பிடுகிறார்கள். ஓரிரு படங்களில் நடித்துக்கொண்டும் இருக்கிறேன்.

டி.எஸ்.என்: எதிர் காலத்தில் உங்களுடைய எதிர்பார்ப்புகள் என்னவென்று சொல்ல முடியுமா?

சிவாஜி: என் வாழ்க்கையில் சிறு வயதிலிருந்து நான் அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை. ஒரே ஒரு விஷயத்தை என் வாழ்க்கையில் எதிர்பார்த்தேன். நான் ஒரு நடிகனாக வேண்டும் என்று ஆசைப்பட்டேன் . ஆண்டவன் அருளால் நடிகனாக ஆனேன். நடிகனாகவே வாழ்கிறேன்.

### முடிவல்ல... ஆரம்பம்

டி.எஸ்.என்: நீங்கள் உங்கள் குடும்பம், பிள்ளைகள், பேரன், பேத்திகளுடன் நெடுங்காலம் வாழ வேண்டும். இந்த நடிப்புத் துறையில் இன்னும் பல பணிகளைச் செய்ய வேண்டும். இன்னும் பெரிய பெரிய விருதுகளெல்லாம் உங்களை வந்தடைய வேண்டும் என்று எல்லோர் சார்பிலும் நான் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

சிவாஜி: மிகவும் நன்றி நாராயணஸ்வாமி என் சுயசரிதையை உருவாக்க நீங்கள் செய்து கொண்டிருக்கும் இந்தப் பணி ஒரு நல்ல முயற்சி. அதை என் மனமாறப் பாராட்டுகி றேன். என்னுடைய வாழ்க்கையை என்னுடைய வார்த்தைகளாலேயே சொல்ல வைத்திருக்கிறீர்கள். நீங்கள் கோர்வையாகக் கேள்விகள் கேட்டதால் என்னால் சுலபமாக பதில்களைச் சொல்ல முடிந்தது. நான் சொன்னதையெல்லாம் தொகுத்து அமைத்தீர்களென்றால் அது கேள்வி பதில் வடிவில் ஒரு கதை போல என் சுயசரிதையாகிவிடும்.

இங்கே நான் பேசிய விஷயமெல்லாம் என்னுடைய உயில் மாதிரி அவ்வளவும் உண்மையான வார்த்தைகள் . பொதுவாக என் வாழ்க்கையில் என் வார்த்தைகளால் யாரையும் புண்படுத்தியதில்லை. ஆனால் உண்மையை தெளிவாகச் சொல்ல நான் தயங்கியதுமில்லை.

என்னுடைய வாழ்க்கை ஒரு பரந்த கடல் போல. என்னுடைய கலையுலக வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் நான் எத்தனையோ கலைஞர்களையும் பெரியோர்களையும் சந்தித்திருக்கிறேன். அவர்கள் அனைவரையும் வரிசைப்படுத்தி இந்த சுயசரிதையில் குறிப்பிடுவது கடினம். எனக்கு பாதிப்பு ஏற்படுத்திய சம்பவங்களையும் என்னைப் பாதித்து வியக்க வைத்த சில மறக்க முடியாத கலைஞர்களையும் பெரியோர்களையும் மட்டுமே நினைவில் கொண்டு குறிப்பிட்டுள்ளேன் . இதில் விட்டுப்போனவர்கள் எல்லோரும் என் நினைவில் வராவிட்டாலும் என் இதயத்தில் எப்பொழுதும் குடி கொண்டிருப்பவர்கள் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.



சிறுவனாக இருக்கும் போதே எண்ணற்ற நாடகங்களில் நடித்து மக்களை மகிழ்வித்தேன். அதன்பின் திரைப்படங்கள் மூலம் நல்ல விஷயங்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னேன். நாடகங்கள், திரைப்படங்கள் மூலம் நிறைய விருதுகளை வாங்கி தாய் நாட்டிற்கு என்னால் இயன்ற பெருமையைத் தேடித் தந்திருக்கிறேன். இந்த நாடு உனக்கு என்ன செய்தது என்று எதிர்பார்க்காதே. இந்த நாட் டிற்கு நீ என்ன செய்தாய் என்று சொல் என்று பெரியவர்கள் கூறி யுள்ளார்கள். அதன்படி இந்த நாடு எனக்கு என்ன செய்தது என்பதை நான் அதிகம் எதிர்பார்க்கவில்லை. இந்த நாட்டிற்கு நான் என்ன செய்கிறேன். இன்னும் என்ன செய்யப் போகி றேன் என்பதைப் பற்றி மட்டும் எண்ணிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அதையேதான் இந்த நாட்டு மக்களையும், நான் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

'இந்த நாடு உங்களுக்கு என்ன செய்தது என்று நினைக்காதீர்கள். நீங்களும் இந்த நாட்டிற்கு என்ன செய்தீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள்?' என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். இன்னும் காலம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்லது செய்து நல்லவர்களாகவும் நாட்டிற்குப் பயனுள்ளவர்களாகவும், வாழ முயற்சி செய்யுங்கள்.

நான் உங்கள் அனைவரின் மனத்திலும், அடுத்து சந்ததியினரின் மனதிலும், என்றும் நிலைத்திருக்க இந்த சுயசரிதை வழிகோலும் என்று நம்புகிறேன்.

(முற்றும்)

நன்றி வணக்கம் ஜெய்ஹிந்த்.



## தவக்கால சிந்தனை

### 'அவனது வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும்'

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்பதிலே" என்று பாடினான் தமிழ்க் கவிஞன். குழந்தையை நல்லவராக வளர்ப்பது அன்னைக்கு மட்டும் உரித்தான கடமையா? இன்று நாம் கொண்டாடும் புனித சூசையப்பரின் வாழ்வு இக் கேள்விக்கு சரியான பதில் தருகிறது. மரியாவின் உற்ற கணவராகவும், இயேசுவின் பொறுப்புமிகு வளர்ப்புத் தந்தையாகவும் புனித யோசேப்பு தன்னை அர்ப்பணித்தார். மரியாவின் கருவறையில் வளரும் குழந்தை தன்னுடையதல்ல என்று தெரிந்தும் தன் பொறுப்பில், கடமையில் சற்றும் பின்வாங்காது இறைவனின் திட்டத்தை நிறைவேற்றத் தன்னையே அர்ப்பணிக்கும யோசேப்பின் உயர்ந்த உள்ளம் போற்றுதற்குரியது. குழந்தையை ஏக்கத்தோடு தேடிய அவரது உள்ளத்தின் உயர்வு எல்லாத் தந்தையர்களுக்கும் ஒரு சிறந்த மாதிரியன்றோ!

காவலன்


அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக

**வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்**

*இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான*

**கரப்பந்தாட்டச் (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006**

*போட்டி நிபந்தனைகள்:-*

01. பங்குபற்றும் அணி பந்து கொண்டுவருதல் வேண்டும்.
02. குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாக மைதானத்தில் சமுகமளித்திருக்கவேண்டும் . தாமதமாகவரும் அணிக்கு 15 நிமிட அவகாசம் அளிக்கப்படும் அதற்குள் சமுகமளிக்காது விட்டால் எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும்.
03. போட்டி சம்பந்தமாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
04. போட்டிகள் A,B என இரண்டு பிரிவாக லீக் முறையில் நடைபெற்றுஈற்றில் இரண்டு பிரிவிலுமிருந்து புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்ற இவ்விரண்டு கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும். அரை இறுதிப்போட்டி விலகல்முறையில் நடைபெறும்.
05. வெற்றி பெறும் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணத்துடன் பணப் பரிசும் வழங்கப்படும்.

25.03.2006 :- விண்ணப்ப முடிவு

*விண்ணப்பிக்கும் முகவரி-*

*தலைவர், வீனஸ் வி.கழகம் ஆவரங்கால் கிழக்கு, மணற்பகுதி, புத்தூர் .*

*மேலதிக விபரங்கள் தேவைப்படின் தலைவர், செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.*

*ஊடக அனுசரணை : வலம்புரி-சங்குநாதம்*


## தனியார் பேருந்து ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு!

(கொழும்பு)

அகில இலங்கை தனியார் பேருந்து ஊழியர்கள் பணி நிறுத்தம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

பணி நிரந்தரமாக்கல் தமது முக்கிய கோரிக்கைகளில் ஒன்று என தனியார் பேருந்து ஊழியர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், வேகமாக வாகனத்தைச் செலுத்துவதற்கு அதிகமான தொகை தண்டமாக அறவிடப்படுகிறது என்றும் இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியை நாளை சந்திக்கவுள்ளதாகவும் இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடையுமானால் எதிர்வரும் 27ஆம் திகதி பணி நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாகவும் தனியார் பேருந்து ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.

(க-9)

## கணனிப் பரீட்சையில் சித்தி பெற்றால் மட்டுமே சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கணனிப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்பினை இடைநிறுத்தி வைக்குமாறு மாகாண பொது நிருவாக அமைச்சின் செயலாளர் ஏ.கே.பத்மநாதன் சகல உள்ளூர் திணைக்களத் தலைவர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் எழுதுநர் நியமனங்களைப் பெற்ற உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்று இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள் மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினரால் நடத்தப்படும் கணனிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைய வேண்டும்.

எனினும், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் குறித்த இரண்டு வருட காலப் பகுதிக்குள் கணனிப் பரீட்சை நடத்தப்படா விட்டால் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்புக்களை வழங்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-9)

# அமெரிக்க விசாமுறையில் சீர்திருத்தம் செய்ய அந்நாட்டு எம்.பிக்கள் யோசனை

(வாஷிங்டன்)

இந்தியாவில் இருந்து உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்களையும், உயர் தொழில்நுட்பத் திறமை வாய்ந்த ஊழியர்களையும் அமெரிக்காவுக்கு ஈர்க்கும் வகையில் அந்நாட்டு விசா வழங்கும் முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது குறித்து அமெரிக்க எம்.பிக்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இது தொடர்பாக அந்நாட்டு குடியுரிமை சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவும் சீனாவும் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ச்சி அடைந்துவருகின்றன. எனவே உயர் கல்வி பயின்றவர்களும் உயர்தொழில்நுட்பத்திறமை வாய்ந்தவர்களும் இனிமேல் கூடுதல் வருவாயையும் வசதியான வாழ்க்கையையும் தேடி அமெரிக்காவுக்கு வருவது குறைந்துவிடும் என்ற கருத்து அமெரிக்க நிபுணர்கள் மத்தியில் உள்ளது. எனவே அமெரிக்காவின் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குப் போதிய ஊழியர்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்படக்கூடும் என்றும் அவர்கள் நினைக்கின்றனர்.

அதனால் அமெரிக்காவில் உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கென எப்-4 என்னும் புதிய வகை விசாவை வழங்கலாம். அவர்கள் படித்து முடித்து அப் படிப்புக்கு ஏற்ற வேலையை அமெரிக்காவில் பெற்றுவிட்டால் அவர்களிடம் இருந்து 45 ஆயிரம் ரூபாவைக் கட்டணமாகப் பெற்றுக் கொண்டு அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியிருப்பதற்கான அனுமதியை வழங்கலாம் என்று அமெரிக்க எம்.பிக்கள் யோசனை கூறி வருகின்றனர்.

அதேபோல் அமெரிக்கா வரவிரும்பும் வெளிநாட்டு தொழில்நுட்ப ஊழியர்களுக்கு வழங்கப்படும் எச்-1பி விசாக்களின் எண்ணிக்கை தற்போது ஆண்டுக்கு 65ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை படிப்படியாக உயர்த்தி ஆண்டுக்கு 1, 15, 000 வரை அதிகரிக்கலாம் என்று மற்றொரு யோசனையும் கூறப்பட்டுள்ளது. (கு)

WORLD NEWS உலக தரிசனம்

# செயற்கை நரம்பு சீனாவில் தயார்

செயற்கை நரம்பு மண்டலத்தை சீனாவின் நான் தாங் பல்கலைக்கழகத்தில் உருவாக்கியுள்ளனர். இதன் செயல்திறன் தொடர்பாக ஆய்வகப் பரிசோதனைகள் நடக்கின்றன.

நரம்புத் தளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுவரும் கோடிக் கணக்கான நோயாளிகளுக்கு இந்த ஆய்வு நம்பிக்கை அளிக்கும் செய்தியாகும். பாதிப்படைந்த நரம்புகளை செயற்கை நரம்புகளுடன் இணைத்து, நுண்ணிய மின்னணுவியல் சிப் உதவியுடன் செயற்பட வைத்து வெற்றி கண்டுள்ளனர். இது ஆய்வகப் பரிசோதனையில் சாத்தியமாகி விட்டது.

இதை வியாதியுள்ளவர்களின் உடலில் பொருத்தி அதன் செயல்திறனை மதிப்பிட வேண்டும். அதிலும் திருப்திகரமான முடிவு கிடைத்துவிட்டால் உலகம் முழுவதும் இந்த சிகிச்சை முறை பரவும். இப் புதிய சிகிச்சையால் நரம்பு வியாதிகளால் பாதிப்புற்று இருப்பவர்கள், உடல் உறுப்புகளை அசைக்க முடியாதவர்கள் நடமாடும் நிலைமை ஏற்படும். அறிவியலில் இது குறிப்பிடத்தக்க சாதனையாகும். (கு)



மேற்கு கரை நகரான யாமூனில் தீவிரவாதிகள் இருக்கக்கூடும் என்று நினைத்து இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியதில் சேதமடைந்த வீடுகள்.

# அந்நிய சக்திகள் நேபாள பிரச்சினையில் தலையிடக்கூடாது சீனா எச்சரிக்கை

நேபாள நாட்டின் உள் விவகாரத்தில் அந்நிய சக்திகள் தலையிடக்கூடாது என்று சீனா எச்சரித்துள்ளது.

நேபாளம் சுதந்திர நாடு. அதன் உள் விவகாரத்தில் அந்நிய சக்திகள் தலையிடக்கூடாது. அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவர்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்றும் சீனா கூறியுள்ளது.

சீன அதிகாரி ஒருவர் நேபாளம் சென்று அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது அந்நிய சக்திகள் தலையிடுவதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். (கு)

# இந்தியா - அமெரிக்கா அணுசக்தி உடன்பாடு

## பாக். அதிபர் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம், தெற்காசியாவில் இராணுவ சம பல நிலையைக் குலைத்துவிடும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் எச்சரித்திருக்கிறார்.

பாகிஸ்தான் இராணுவ வீரர்களிடம் கடந்த வெள்ளிக்கிழமை பேசிய அதிபர் முஷாரப், இந்தியாவும் அமெரிக்காவும் செய்துகொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தால் தெற்காசியாவில் இராணுவ பல நிலையில் மாறுதல் ஏற்பட்டுவருகிறது என்று அச்சம் தெரிவித்தார்.

அதே சமயம், நமக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய நமது நீண்ட நாளைய நண்பன் சீனா தயாராக இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார். இந்தியாவுடன் செய்துகொண்டதுபோல எங்களுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளுங்கள் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிடம் அவர் அப்போதே கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வெவ்வேறு வரலாற்றுப் பின்னணி உள்ளது. இந்தியாவிடம் அணுசக்தி இருந்தாலும் அதை ஆக்கப்பணிகளுக்கெனப் பயன்படுத்துவதில் இந்தியா முனைப்பாக இருக்கிறது.

அணு ஆயுதம் போன்ற முக்கியமான விடயத்தில் காட்டவேண்டிய எச்சரிக்கையையும் பொறுப்புணர்வையும் இந்தியா காட்டிவருகிறது. எனவே அதனுடன் பாகிஸ்தானை ஒப்பிட்டு உடன்பாடுசெய்து கொள்ள முடியாதென்று முஷாரப்பின் எதிரிலேயே ஜோர்ஜ்புஷ் இஸ்லாமாபாத் நிருபர்களிடம் கூறிவிட்டார். அதிலிருந்து வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் முஷாரப் இந்திய, அமெரிக்க அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைக் குறை கூறிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# பறவைக்காய்ச்சலில் பெண் பலி

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஜப்பான், தாய்லாந்து உட்பட பல்வேறு நாடுகளில் உருவான பறவைக் காய்ச்சல் இப்போது மீண்டும் தலைதூக்கி வருகிறது. இந்தியாவில் மராட்டிய மாநிலத்தில் இந்த பறவைக் காய்ச்சல் கோழிகளை பாதித்தது. இலட்சக்கணக்கான கோழிகள் இதனால் கொல்லப்பட்டன. இப்போது பறவைக் காய்ச்சல் எகிப்து நாட்டிலும் பரவி மனிதர்களை தாக்க ஆரம்பித்துள்ளது.

எகிப்து நாட்டில் கலை மானியா நகரில் குர்திஷ் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் கடந்த 3 வாரங்களாக சிகிச்சை பெற்று பலனளிக்காமல் பலியானார். 40 வயதான அந்தப் பெண் பறவைக் காய்ச்சலை ஏற்படுத்தும் பி.எச். 5 என் 1 வைரஸ் கிருமிகளால் தாக்கப்பட்டமை மருத்துவ பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. எகிப்தில் பறவைக்காய்ச்சலுக்கு பலியான முதல் பெண் இவர்தான். அவரது கிராமத்துக்கு அதிகாரிகள் சென்று சீல்வைத்துள்ளனர். அவரது உறவினர்களிடம் மத்துவ பரிசோதனை நடக்கிறது.

ஈரான், இஸ்ரேல், குவைத், சவுதி அரேபியா போன்ற நாடுகளுக்கும் இந்த நோய் பரவத் தொடங்கியிருக்கிறது. இதையடுத்து அந்நாடுகளில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இஸ்ரேலில் 4 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் பறவைக் காய்ச்சலுக்கு பல்வேறு நாடுகளில் 100க்கும் மேற்பட்டவர்கள்பலியாகிஇருக்கிறார்கள். (கு)



அமெரிக்காவில் லியோமிஸ்டர் நகரில், நின்று கொண்டிருந்த ஒரு காரின் முன் இருக்கையில் தலையை கண்ணாடிக்கு வெளியே நீட்டிக்கொண்டு இருந்த பெரிய சைஸ் மானை, அதிகாரிகள் காரை உடைத்து வெளியே எடுத்தனர்.

# பயங்கரவாதிகளுக்கு உதவியவருக்கு 9 ஆண்டு சிறைத்தண்டனை

காஷ்மீரில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்களுக்கு துப்பாக்கிகள், உயர்நுட்ப கண்காணிப்புக் கருவிகள் உள்ளிட்ட ஆயுதங்களை சப்ளை செய்து வந்த பயங்கரவாதிக்கு பிரிட்டன் நீதிமன்றம் 9ஆண்டுச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

லஷ்கர்-இ-தொய்பா என்னும் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 31வயதான முகம்மது அஜ்மல் கான், லஷ்கர் அமைப்புக்காக பிரிட்டனில் உள்ள முஸ்லிம்களிடம் பல கோடி ரூபாய் நிதி திரட்டியுள்ளார்.

அதில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் வாங்கி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் காஷ்மீரிலும் பயங்கரவாதச் செயல்களின் ஈடுபட்டுள்ள தீவிரவாதிகளுக்கு அனுப்பிவந்துள்ளார். பயங்கரவாதச் செயல்களைச் செய்வதில் பயிற்சி பெற்றவர் அவர்.

இங்கிலாந்தில் உள்ள கோவென்ட்ரி என்ற இடத்தில் வசித்துவந்த அவரை அந்நாட்டுப்பொலிஸார் கைதுசெய்து வழக்கு தொடர்ந்தனர். விசாரணையில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்காக அவர் பிரிட்டனில் நிதி திரட்டி வந்துள்ளதும், ஆயுதங்கள் வாங்கி, பயங்கரவாதிகளுக்கு சப்ளை செய்திருப்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தமது அமைப்புக்கும் அல்-கொய்தா அமைப்புக்கும் தொடர்பு உண்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் இஸ்லாமிய அரசை ஏற்படுத்தும் நோக்கத்தில் பயங்கரவாதிகளுக்கு உதவி வருவதாகவும் முகம்மது அஜ்மல் கான் தெரிவித்துள்ளார். அதையடுத்து அவருக்கு 8 ஆண்டு சிறைத்தண்டனையும், நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ஓர் ஆண்டுச் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்புக் கூறினார் நீதிபதி. (கு)

பிடிவாதம், வைராக்கியம் இவைகளின் வேறுபாடு தெரிந்து உறுதி கொள்ளுங்கள். தெளிந்த செயலில் வெற்றி காணுங்கள்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## புலிகள் மீதான தடையை நீக்க நிபந்தனை விதிக்கலாமா?

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி அமெரிக்கா பரிசீலிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த தென்னாசிய விடயங்களுக்கான அதிகாரி டேவிப் காம்ப் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை முற்றாக நிறுத்தியுள்ளதாக அமெரிக்க அரசு ஏற்றுக் கொள்ளும் வகையில் விடுதலைப்புலிகள் தெளிவுபடுத்தினால்,

அவர்கள் மீதான தடையை நீக்க முடியும் என்பது அமெரிக்காவின் கருத்து. விடுதலைப் புலிகளின் மீது அமெரிக்கா விதித்த தடை சுய நல நோக்குடையது.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை அமெரிக்க முன்வைப்பதற்கு முன்னதாக அந்த அமைப்பு ஏன் உருவானது? இதனை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு என்னவென்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

கடந்த 20 வருட கால யுத்தம் இலங்கைத் தீவில் நடந்துள்ளது. இதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். இதனைத் தடுத்துநிறுத்த அமெரிக்கா ஒருபோதும் முன்வந்ததில்லை-முயன்றதில்லை.

தமிழர்களின் உரிமை விடயத்தில் இலங்கையரசை மிரட்டும் போக்கு அமெரிக்காவிடம் இருக்குமாயின், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்குமாயின் இன்று நிலைமை மாறியிருந்திருக்கும்.

இதைவிடுத்து தமிழர்களுக்கெதிரான கொடூர யுத்தத்தை முன்னெடுப்பதற்காக இலங்கையரசுக்கு ஆயுதங்களை வழங்கிவிட்டு, மறுபுறத்தால் விடுதலைப்புலிகளை தடை செய்வதென்பது தமிழர்களுக்குஎதிரான அமெரிக்காவின் போக்கையே வெளிப்படுத்தும்.

ஜெனீவாவில் நடந்த பேச்சுக்களின் பின்னரும் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அமெரிக்கா நிபந்தனை விதிப்பது அழகல்ல.

விடுதலைப்புலிகள் மீதான தடையினால் அமெரிக்கா தனக்கு எதிரான நாடு என்ற ஈழத்தமிழர்களின் நினைப்பை-மன நிலையை மாற்ற வேண்டுமாயின்,

சமாதானத்தின் தீர்வுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பேரினவாதிகளின் கொட்டம் அடக்கவேண்டுமாயின்,

புலிகளின் மீதான தடையை நீக்க அமெரிக்கா முன்வர வேண்டும்.

## தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள
# எந்தவொரு நாட்டில் யுத்தம் நடந்தாலும் அது அருகாமை நாடுகளைப் பாதிக்கும்
## இந்தியாவின் முன்னாள் பிரதமர் குஜ்ரால் கவலை

(கொழும்பு)

**தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள ஒரு நாட்டில் ஆயுதப் போராட்டம் நடை பெற்றால் அது அருகாமை நாடுகளை நேரடியாகப் பாதிக்கும் என்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் கவலை தெரிவித்துள்ளார்.**

தெற்காசிய மனித உரிமைகளுக்கான அமைப்பின் தலைவராகவும் உள்ள ஐ.கே.குஜ்ரால் கொழும்பு ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்தியம் முழுமைக்கும் குறைபாடுள்ள சூழ்நிலை உள்ளது. ஆனாலும் மிக மோசமான நிகழ்வு கள் நடைபெறாமல் நாம் தடுத்திருக்கிறோம் மனித உரிமைகளை வலுப்படுத்துவதன் மூலமாக ஜனநாயகத்தை நாம் வலுப்படுத்த வேண்டும்.

வாக்களிப்பது மட்டுமே ஜனநாயகம் அல்ல. நாம் சரியான நபரைத் தேர்ந்தெடுப்பதும் அவசியமானதாக இருக்கிறது. மக்களினது மனித உரிமைகளுக்கான பாரிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. இத்தகைய நிறுவனங்களுக்காக நாம் செலவிடுதல் அவசியமாகும். ஜன நாயக கட்டமைப்பில் கூட நீதித்துறை சுதந்திரமாக இயங்க முடியாததாக உள்ளது.

பிரதேசரீதியாக ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதில் விவாதத்துக்கு இடம்கொடுக்காமல் அனைத்துத் தரப்பினரும் வளங்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் இத்தகைய நிலைமை இல்லாதிருக்கும் போதே ஆயுதப் போட்டி, அணு ஆயுதப் போட்டி என்று உருவாகிறது. தெற்காசிய பிராந்தியத்தில் ஆயுதப்போராட்டம் ஒரே ஒரு நாட்டில் நடைபெற்றால் கூட அது இதர தெற்காசிய நாடுகளுக்கு மோச மான முன்னுதாரணம் மட்டுமின்றி அருகாமை நாடுகளை நேர டியா கப் பாதிக்கக் கூடியதுமாகும்.

இதேவேளை, மதச் சகிப்புத்தன்மையின்றி வளரும் போக்கானது அரசாங்கத்துக்கு சவாலானது. ஆகையால் அரசியலில் பொறுப்பானவர்கள் அதற்கு முகம் கொடுக்க வேண்டியது அவசியம்.

இலங்கையின் வடக்கு -கிழக்கு இனப்பிரச்சினை தொடர்பில் வருந்துகிறோம். இப்பிரச்சினையால் உள் நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான அமைதியும், மனித உரிமையும் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

அத்துடன் தெற்காசிய நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுவது என்பது இலங்கையின் வளர்ச்சிக்கு அவசியமானது என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன் என்றார் ஐ.கே.குஜ்ரால். (கு)

# ரணில், சந்திரிகாவுடன் மஹிந்த இணைந்து செயற்படவேண்டும்
## பிரதி அமைச்சர் அர்ஜூனரணதுங்க வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க , முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைந்து செயற்படவேண்டும் என்று பிரதி அமைச்சர் அர்ஜூன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க மற்றும் சந்திரிகாவுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைந்து செயற்பட்டால் இனப் பிரச்சினைக்கு எளிதில் தீர்வு காண முடியும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படக் கூடாது என்ற சக்திகளின் செயற்பாட்டை இதன் மூலம் தடுக்க முடியும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயற்பாட்டை சந்திரிகா குமாரதுங்க தொடங்கி வைத்தார். அதை ரணில் விக்கிரமசிங்க அடுத்த கட்டத்துக்கு முன் நகர்த்தினார் இருவரும் அமைதி முயற்சிகள் தொடர்பில் அனுபவம் கொண்டவர்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அனுபவம் உள்ளவர்கள்.

ஆகையால் அவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைந்து செயற்பட வேண்டும் என்றார் அர்ஜுன் ரணதுங்க. இதற்கிடையில் ஜே.வி.பியை எதிர்க்க ஐக்கிய தேசியக்கட்சியுடன் தேசிய அரசாங்கத்தை மஹிந்த ராஜபக்ஷ அமைக்கக் கூடும் என்று செய்திகள் வெளியாகி உள்ள நிலையில் அர்ஜுன ரணதுங்கவும் அத்தகைய கருத்தை வெளிப்படுத்தியிருப்பது இங்கு குறிப் பிடத்தக்கது. (கு)

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்படவில்லை
# ரணில் விக்கிரமசிங்கவுக்கு நோர்வே விளக்கம்

(கொழும்பு)

ஜெனீவாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணிலிடம் நோர்வே தரப்பு விளக்கம் அளித்துள்ளது என்று அக்கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நோர்வேக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க ஜெனீவா பேச்சுக்களின் உண்மை நிலைமைகளை விளக்குமாறு நோர்வேத் தரப் பிடம் கோரியுள்ளார்.

அதற்கு கொழும்பில் வைத்து அரசாங்கக் குழுவினர் தெரிவித்தது போல் ஜெனீவா பேச்சு மேசையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் எதுவித திருத்தமும் மேற்கொள்ளப் படவில்லை என்று நோர்வேத் தரப்பு விளக்கம் அளித் துள்ளது.

ஜெனீவாப் பேச்சுக்களில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாப்பது தொடர்பாகவும் அமைதி முயற்சிகள் தொடர்பாகவுமே விவாதிக்கப்பட்டதாகவும் நோர்வேத் தரப்பினர் கூறியுள்ளனர்

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை சமாதானப் பொறுப்பாளருமான எரிக் சொல்ஹெய்மையும் ரணில் சந்தித்துப் பேசினார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பில் இந்தியாவுடன் விவாதிக்க உள்ளதாக இச்சந்திப்பில் எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காக அனைத்துத் தரப்பினரும் ஏற்கக்கூடிய தீர்வு ஒன்றை முன் வைக்கவே நோர்வே மற்றும் உதவி வழங்கும் நாடுகள் விரும்புவதாகவும் எரிக்சொல்ஹெய்ம் மேலும் கூறியுள்ளார். (கு)

# ஏப்ரல் பேச்சு ஜெனீவாவில் புதிய இடத்தில் நடைபெறும்

(கொழும்பு)

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான ஏப்ரல் பேச்சு வார்த்தை புதிய இடத்தில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெப்ரவரி பேச்சுக்கள் நடைபெற்ற சட்டியூ டி பொசி அரண்மனையில் 2ஆம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறாது என்று சுவிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் பேச்சுக்கள் நடைபெறும் நாட்களான 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை அந்த அரண்மனை வேறு ஒரு நிகழ்ச்சிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவாலயங்களின் சர்வதேச சபைக்குச் சொந்தமான சட்டீயூடி பொசி அரண்மனை பொசி ஜெனீவா நகருக்கு வெளியே ஜெல்க்னி என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த அரண்மனையில் பல சர்வதேச பயிலரங்கங்கள் நடத்தப்படுகின்றன. அத்துடன் அந்த அரண்மனை வளாகத்தின் மேற் கூரை தாழ்வானதாக இருந்தமையால் பேச்சுக்குழுவில் இடம்பெற்றிருந்த பலரும் “கூரை குட்டு வாங்க” நேரிட்ட தாகவும் தெரிகிறது.

இதனால் தற்போது புதிய இடம் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான முயற்சியில் சுவிஸ் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது. (கு)

## தினசரி தியானம்
## விவேகச் சிந்தனைகள்



**ஜீவாத்மாவாகிய நாம் பரமாத்மாவாகிய இறைவனுக்கு அந்நியமானவர்கள் அல்ல. இறைவனை நெருங்கும் போது பயம் கூடாது. தாழ்வு மனப்பான்மை கூடாது. மாறாக அவரை நமக்கு மிகவும் நெருங்கியவராகக் கருதி பக்தி செலுத்த வேண்டும்.**

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில பாடத்திற்கு 30 மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலப் பாடக் கற்கை நெறிக்கு 30 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் என மேலதிக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களினதும் பெயர் விபரம் வருமாறு:-

எஸ்.றஜிகலா (உசன், மிருசுவில்) , ரி. பொன்னம்பலநாதன்(கரவெட்டி), பி.சுமன் (யாழ்ப்பாணம்), கே.கார்த்திகா(யாழ்ப்பாணம்) , ரி.சோபா(வவுனியா) , எஸ்.அரியரட்ணம்(புதுக்குடியிருப்பு), வி.ஜெனார்த்தனி (வவுனியா), ஏ.எவ்.சுகந்தி(கிளிநொச்சி), சி.எஸ்.மனோராஜன்(யாழ்ப்பாணம்),ரி.சோபியா(யாழ்ப்பாணம்),ஈ.எட்வார்ட்(சுண்டுக்குளி), ஜே.ஆர்.ரவீந்திரகுமார்(உரும்பிராய்),பி.இந்துரை(சாவகச்சேரி), எ.தர்ஷன்(பருத்தித்துறை), ஜே.சிந்துரை(யாழ்ப்பாணம்), பி.நிஷானி(மானிப்பாய்), எஸ்.நளினி(ஆனைக்கோட்டை), எவ்.பிரசாத்(யாழ்ப்பாணம்), ஜி. விஜயதர்சினி(சண்டிலிப்பாய்), என்.பிரசாந்தன்(நீர்வேலி), என்.அருள்வாணி(சங்கானை) , ஜே.ஜெயப்பிரியா(உரும்பிராய்), பி.றுபா (சாவகச்சேரி), கே.கபிலா(வவுனியா), எஸ். லாவண்யா(வட்டுக்கோட்டை), என்.கல்பனா(வவுனியா), சி.நிஷாந்தி(யாழ்ப்பாணம்), எஸ்.சுவதிகா(வட்டுக்கோட்டை), கே.தேவதர்சிகா(காரைதீவு), வினோதா(காரைதீவு). (ச)

## தமிழ்க் கூட்டமைப்பு ...

புக் கோரிக்கை விடுத்துள்ளது.

துணை ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்கள் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றமை, பாதுகாப்புப் படைகளால் அச்சுறுத்தப்படுகின்றமை, தமிழ் மக்கள் தேர்தலை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலை ஆகியவற்றைக் காரணங்களாகக் கொண்டே தேர்தலை பிற்போடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

இதனடிப்படையில் அரசு தனது முடிபினை வெளிப்படையாகத் தெரிவிக்காத நிலையில் காலத்தைக் கடத்தி வருகின்றது. திடீரென தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எப்படி எதிர்கொள்வது, நடத்தப்படாது விட்டால் அதனை எப்படி அணுகுவது என்பது பற்றி கலந்துரையாடப்பட்டது.

அரசாங்கம் மக்களின் அபிலாசைகளைப் புறக்கணித்துத் தேர்தலை நடத்துவது என அறிவித் தால், அப்போது தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்ற முடிபுகளை எடுத்துள்ளோம் என்றார்.

இதேவேளை தமிழர் தாயகத்தில் இடம்பெறும் சுற்றிவளைப்புக்கள், தாக்குதல்கள், அடாவடித்தனங்கள், படுகொலைகள்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை அச்சுறுத்துகின்ற நிலைமை தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில்தான் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசிடம் கோரியுள்ளோம். தேர்தல் நடத்தப்பட்டால் அதனையும் எதிர்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் தயாராகவுள்ளோமென செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்தார்.

தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சந்திக்காது விட்டால் அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்கள் வடக்கு – கிழக்கிலே கால் ஊன்றுவதற்கு வசதியாக அமைந்துவிடும். அதனை முறியடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் குதிக்கும் என்றார் செல்வம் அடைக்கலநாதன். (ச-4,5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



அன்பிலே உயர்ந்த உள்ளம்
அமைதி ததும்பும் வதனம்
பண்பிலே பனிவரை
பிறர்க்குதவும் கொள்கை
கண்ணிலே கருணை மழை
காட்டாறு போன்ற அருள்
எண்ணத்தில் உயர்ந்த எங்கள்
எழில் பால சுப்பிர மணியன்...!

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராக பதவி உயர்ந்து 21.03.2006 அன்று ஓய்வு பெறும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கணபதிப் பிள்ளை பாலசுப்பிரமணியம் பல்வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என் இதயம் கனிய வாழ்த்தும் ஆனைக்கோட்டை

பாலகுமாரநாதன் குடும்பத்தினர்

(C-01-268)

# போராளிகள் மீதான தாக்குதல்கள் விடுதலைப்புலிகள் கடும் அதிருப்தி

## நோர்வே அரசு இலங்கை அரசிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுகளுக்குப் பின்னர் தங்களது போராளிகள் மீதான தாக்குதல்களால் தமிழீழ விடுதலைப்புலிகள் அதிருப்தி அடைந்திருப்பதை அரசாங்கத்திடம் நோர்வேயின் சமாதான முதன்மைத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அரச பேச்சுக்குழுவின் தலைவர் நிமல் சிறி பால டி சில்வாவை எரிக் சொல்ஹெய்ம் கடந்த வாரம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

தங்கள் போராளிகள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக அதிருப்தி அடைந்திருப்பதாக விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுத் தலைவர் பாலசிங்கம் தம்மிடம் தெரிவித்ததாக எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளமை தொடர்பிலும் நிமல் சிறி பால டி சில்வாவிடம் எரிக் சொல்ஹெய்ம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்தகைய அறிக்கைகள் அமைதி முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்காது என்றும் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

## தமிழ்க் கூட்டமைப்பினர் 21 ஆம் திகதி பகிஷ்கரிப்பு

ஜெனீவாவில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி நாளை 21 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவுள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின்படி துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய அரசு உடன்பட்டிருந்தது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனையடுத்தே இம் முடிபு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி தெரிவித்தார். அன்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு உபதலைவர் மாவை சேனாதிராசாவினால் சபாநாயகரிடம் அறிக்கை ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. (ச)

## கடற்படைப் படகு...

எனும்கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதன் பின்னர் சம்பவம் குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டதையடுத்து கண்காணிப்பாளர் ஒருவருடன் அங்கு சென்ற கடற்படைப் படகு மீதும் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எனினும் இதன்போது கடற்படைத் தரப்புக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லையென கண்காணிப்புக் குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பாக தங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ள போதும் எதையும் உறுதிப்படுத்த முடியாது இருப்பதாகவும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலவஸ்டொபிக் தெரிவித்தார். (ச-4)

## நான்கு மாணவர்...

கல்வி கற்றுவரும் உருணு ஜேக்கப் (வயது-17) மற்றும் புனித வளனார் தமிழ் வித்தியாலய மாணவனான சேதுலிங்கம் விஜய் ஆகியோரே நீரில் மூழ்கி மரணமாகினர்.

இதேவேளை திருகோணமலை மாநகர சபைக்கடற்கரைக்குஅண்மையிலேயே கடந்த ஜனவரி மாதம் இரண் டாம் திகதி ஐந்து இந்துக் கல்லூரி மாணவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## துணைவேந்தர்...

துப் பேசுவதற்கு தான் அனுமதி கோரியுள்ளதாக கூறிய அவர் அச் சந்திப்பின்போது தனது நிலை குறித்து தெளிவுபடுத்தவுள்ளதாகவும் கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி புதிய துணைவேந்தராகப் பதவியேற்கவிருந்த பேராசிரியர் கூல் மாணவர்களின் எதிர்ப்புக் காரணமாக இதுவரையும் பதவியேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தேசிய அரசாங்கத்தை...

ஜெனீவாவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுகளுக்கு முன்னரே நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்று ஜே.வி.பி. காலக்கெடு விதித்துள்ள நிலையில் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் நடைமுறை ஏற்பாடுகள் பற்றி பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த தேர்தலில் சுதந்திர முன்னணி 106 ஆசனங்களை வென்றது. இதில் ஜே.வி.பி. 39 ஆசனங்களைப் பெற்றது. இன்னுமொரு தேர்தலை நடத்தினால் ஜே.வி.பியின் ஆசனங்கள் குறைந்துவிடும் என்று கணிப்பிடப்படுவதாக ஆங்கில நாளேடான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே.வி.பியினதும் ஜாதிக ஹெலஉறுமயவினதும் விட்டுக் கொடுக்காத் தன்மையே ஜனாதிபதியை தேசிய அரசு அமைக்கத் தூண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசியல் பொருளாதார உறுதிப்பாடு நிலைநிறுத்தப்பட வேண்டி உள்ளதால் தேசிய அரசை அமைப்பது முக்கியமானது என சில அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளதாகக் கூறப்பட்டது. (ச-6,5)

உடன் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர்கள்

சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி,
பிறவுண் வீதி,
இல.3 இரண்டாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகஸ்தர்




சங்கானை காலை. 11.00, 2.45,6.00,(பு.நே)

இன்று முதல்
தினசரி நான்கு காட்சிகள்
தாங்கர் பச்சான்,
நவ்யாநாயர் நடித்த
சிதம்பரத்தில் ஒரு
அப்பாசாமி
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 20.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.